Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MODAY, SEPTEMBER 26, 2022

திங்கட்கிழமை செப்டெம்பர் 26, 2022 | ஒளி: 08 கதிர் 107 | பக்கம்:08 | FREE



## அருள் தரும் நவராத்திரி

2022ஆம் ஆண்டுக்கான நவராத்திரி விரதமானது புரட்டாதி மாத முதலாவது வளர்பிறை தினமான இன்று (26) ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் 4ஆம் திகதி நிறைவடை யவுள்ளது.

தொடர்ச்சி P2

## வீட்டுக்காவலில் சீன ஜனாதிபதி?



சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் சீன மக்கள் விடுதலை இராணுவ தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் செய்தி வெளியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

83 பேர் கைது விவகாரம்

## ஐஜிபியிடம் அறிக்கை கோருகிறது ஆணைக்குழு

சோசலிச இளைஞர் சங்கத்தால் மருதானையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, 83 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் உடனடி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு (ஐ.ஜி.பி) அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை இன்று (26) காலை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும்

# ஆதரவும் அவசியம்

நிலையான மற்றும் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கேட்டுக் கொண்டார். நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 77ஆவது பொதுச் சபை அமர்வில் இலங்கை நேரப்படி நேற்று (25) அதிகாலை 2.30 மணியளவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உள்ளிட்ட வேறு எந்த நாடுகளினாலும் சவால்களை தனியாக சமாளிக்க முடியாது என கூறிய அவர், கொரோனா தொற்று மற்றும் ஏனைய விடயங்களினால் ஏற்பட்ட நெருக்கடிகளால் வளரும் நாடுகளும் அவற்றின் பொருளாதாரங்களும் கடுமையான ஆபத்தில் உள்ளதாக குறிப்பிட்டார்.

போதுமான மூலதனத்துக்கான அணுகல் இல்லாததால் வறுமை, வேலையின்மை மற்றும் பட்டினி ஆகியவற்றை மக்கள் எதிர்கொள்வதாகவும் கடந்த ஐ.நா. பொதுச் சபைக்குப் பின்னர் இலங்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலையான மற்றும் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜப்பான் செல்கிறார் ஜனாதிபதி ரணில்



உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு பயணிக்கவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று அதிகாலை (26) ஜப்பான் நோக்கி பயணமானார்.

முதலில் ஜப்பானுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி, ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ச்சி P2

## சர்வாதிகாரியாக முயல்கிறார் ரணில்

**அடக்குமுறையை கையாள்வதாக அநுர குமார குற்றச்சாட்டு**

**பதுங்கு குழிக்குள் ஒளிய நேரிடும் என்கிறார் அநுர**



வானளாவ உயரும் வாழ்க்கைச் செலவு, வட்டி வீத அதிகரிப்பு மற்றும் பல பிரச்சினைகளுக்கு எதிராக மக்கள் எழுச்சி பெறுவதை தடுப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அடக்குமுறையை கையாள்வதாக தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதி ரணில், சர்வாதிகாரியாகச் செயற்பட முயல்வதாக குற்றம் சுமத்தினார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி நிதியத்திலிருந்து

## உயர்தர மாணவர்களுக்கு ரு.5,000 புலமைப்பரிசில்

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் முதற்தடவையிலேயே சித்தியடைந்து க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.


தொடர்ச்சி P2

ஹமில்டன் வங்கியின் வழக்கை

## தள்ளுபடி செய்யுமாறு இலங்கை கோரிக்கை

இறையாண்மைப் பத்திரங்களை திருப்பிச் செலுத்தாததற்காக ஹமில்டன் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறுஅமெரிக்க நீதிமன்றத்திடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக நிதிச் செய்தி நிறுவனமான ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## மணித்தியாலத்துக்கு 32 பேர் பறக்கின்றனர்

புதிய அறிக்கைகளுக்கு அமைய இலங்கையில் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் 32 இலங்கை பிரஜைகள் வெளிநாடு செல்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மற்றும் இன மத நல்லிணக்கத்திற்கான கூட்டமைப்பின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

“தேசிய மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துதலும் சிறந்த நாட்டுக்கான புதிய அரசியலமைப்பும்” என்ற கூட்டத் தொடரின் புத்தளம் மாவட்டத்துக்கான கூட்டம் சிலாபத்தில் இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## போஷாக்கு பிரச்சினையை கண்டறிய கணக்கெடுப்பு



நாட்டில் உள்ள போஷாக்கு பிரச்சினைகளை கண்டறியும் நோக்கில் நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் பதிவாகும் போஷாக்கு குறைபாடு தொடர்பான சம்பவங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



குருந்தூர் மலை விவகாரம்;

## லோகேஸ்வரனுக்கு 29 வரை விளக்கமறியல்

■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையை காணி அபகரிப்பு குறித்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போது கைது செய்யப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா (24) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

சோசலிச இளைஞர் ஆர்ப்பாட்டம்

# மூவருக்கு சரீரப்பிணை

**ஏனையோருக்கு பொலிஸ் பிணை**

கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர உட்பட மூவரையும் தலா 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணைகளில் விடுவிக்குமாறு மாளிகாகந்த நீதவான், நேற்று (25) உத்தரவிட்டார்.

மேலும் 83 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்ட மூவர் தவிர ஏனைய அனைவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

“ புதிய சக்தி  இளைஞர் சக்தி மீண்டும் கொழும்புக்கு’ என்ற தொனிப்பொருளில் அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சோசலிச இளைஞர் சங்கம், சனிக்கிழமை (24) கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் பேரணியை ஆரம்பிக்க இருந்தது.

இந்நிலையில், குறித்த பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்த போதும், லிப்டன் சுற்றுவட்டத்தில் இருந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு டீன்ஸ் வீதியூடாக கொழும்பு கோட்டையை நோக்கி பயணிப்பதற்கு தயாராகினர்.

இந்நிலையில், சுகாதார அமைச்சு அமைந்துள்ள பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது, இரண்டு தேரர்கள், நான்கு பெண்கள் உள்ளிட்ட 84 பேரை கைது செய்ததாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்திருந்ததார்.

தொடர்ச்சி P2

## ஏரோ.ஃ.ப்ளோட் சேவை ஒக். 9 முதல் ஆரம்பம்

**எரிபொருள் குறித்து இலங்கைக்கு நிபந்தனை**

ரஷ்ய அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான இராஜதந்திர நட்புறவுக்கு அமைய கொழும்பில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த விமான சேவையை ஒக்டோபர் 9ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கு ரஷ்ய விமான நிறுவனமான ஏரோஃப்ளோட் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு வருகைதரும் விமானங்களுக்கு தடையின்றி விமான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிபந்தனை முன்வைக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் எரிபொருளை பெற முடியாமல் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக வேறு இடத்துக்கு செல்ல வேண்டி ஏற்பட்டால், அதற்கான செலவை இலங்கை அரசாங்கமே செலுத்த வேண்டும் என அந்த நிறுவனம் நிபந்தனையில் வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைய ஒக்டோபர் முதல் வாராந்தம் இரண்டு விமானங்கள் இயக்கப்படும் என்றும் பங்கொக் மற்றும் கோவாவுக்கான வழமையான விமான சேவைகள் இடம்பெறும் என்றும் நிறுவனம் அறிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# வீட்டுக்காவலில் சீன ஜனாதிபதி?

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் பங்கேற்றுவிட்டு செப்டம்பர் 16ஆம் திகதி பீஜிங் திரும்பிய அவர், விமான நிலையத்தில் வைத்து சீன இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

சீன அரசாங்கத்தை இராணுவம் கைப்பற்றிவிட்டதாகவும், பெய்ஜிங் நகரம் முழுக்க இராணுவக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறி சிலர் வீடியோக்களையும் பகிர்ந்து வருகின்றனர். செப்டம்பர் 22ஆம் திகதியன்று, பீஜிங்கை நோக்கி இராணுவ வாகனங்கள் அணிவகுத்துச் செல்வதாகவும் ஊடகங்களில் வீடியோ வெளியாகியுள்ளதுடன், 80 கிமீ நீள இராணுவ வாகன தொடரணி பீஜிங்கை நோக்கிச் செல்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வணிகப் போக்குவரத்து திடீரென நிறுத்தப்பட்டதால், ஜின்பிங்கின் கைது பற்றிய கதைகள் பீஜிங்கிலும் உலகளாவிய இணையத்திலும் பரவுகின்றன. சீனாவில் கிட்டத்தட்ட 60% விமானங்கள் எந்த விளக்கமும் இல்லாமல் வெள்ளிக்கிழமை தரையிறக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் சீன ஜனாதிபதி ஹு ஜின்டாவோ மற்றும் முன்னாள் பிரதமர் வென் ஜிபாவோ ஆகியோர் சீன அரச அதிகாரத்தை எடுத்துக் கொண்டதாக நியூஸ் ஹைலேண்ட் விஷன் தெரிவிக்கிறது.

சீன இராணுவம் பெய்ஜிங்கை நோக்கி நகர்வதாகக் கூறி தற்போது அமெரிக்காவில் வசிக்கும் சீன மனித உரிமை ஆர்வலர் ஜெனிபர் ஜெங், தனது டுவிட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

# ஐஜிபியிடம் அறிக்கை கோருகிறது ஆணைக்குழு

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமையை பரிசோதிப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் சனிக்கிழமை (24) வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் கொழும்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் நேரடி கண்காணிப்பில் இடம்பெற்று வருகின்றன.

அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சோசலிச இளைஞர் சங்கம், சனிக்கிழமை (24) ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது, இரண்டு தேரர்கள், நான்கு பெண்கள் உள்ளிட்ட 84 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.

# உயர்தர மாணவர்களுக்கு ரூ.5,000 புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் 5,000 ரூபாய் வீதம் ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய புலமைப்பரிசில் பெறுவதற்காக ஒரு கல்வி வலயத்திலிருந்து தகுதியுடைய 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் அதன்படி நாடு முழுவதுமுள்ள 99 கல்வி வலயங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 2970 மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இவ்வருட க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகி க.பொ.த உயர்தர கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதும் இந்த புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு துரிதமாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.



# ஆதரவும் அவசியம்

உலகம் பல சிக்கலான ஒன்றோடொன்று சவால்களை எதிர்கொள்கிறது. தொற்றுநோயின் தொலைநோக்கு விளைவுகள் தற்போதைய உலகளாவிய நெருக்கடிகளால் மேலும் மோசமடைந்துள்ளன என்றார்.

"பருவநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு மற்றும் அதிகரித்து வரும் மாசுபாடு ஆகிய மூன்று கோள்களின் நெருக்கடி" ஆகியவற்றுக்கு இடையேயான "ஐந்து-அலாரம் உலகளாவிய தீ" என்று பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளவற்றின் பேரழிவு விளைவுகளால் இந்த பாதிப்புகள் மோசமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயிர், உடைமை மற்றும் வாழ்விட இழப்பு, தன்னிச்சையான மனித இடப்பெயர்வு மற்றும் அதனுடன் இணைந்த உணவு மற்றும் ஆற்றல் நெருக்கடி ஆகியவற்றின் விளைவாக ஏற்படும் தீவிர வானிலை முறைகளையும் நாங்கள் காண்கிறோம் என்று குறிப்பிட்டார்..

காலநிலை பாதிக்கப்படக்கூடிய நாடாக, காலநிலை மாற்றம் இலங்கையின் சமூக-பொருளாதார முன்னேற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்றார்.

2050 ஆம் ஆண்டளவில் கார்பன் நடுநிலைமையை அடைவதற்காக உமிழ்வைக் குறைக்கும் நோக்கத்துடன் கடந்த ஆண்டு UNFCCC க்கு சமர்ப்பிக்கப்பட்ட பாரீஸ் ஒப்பந்தம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளின் (NDC) இலக்குகளை அடைவதாக இலங்கை உறுதியளித்துள்ளது.

பசுமை பொருளாதார வளர்ச்சி இலக்குகள். NDC இலக்குகளை அடைவதற்கும், புதுப்பிக்கத்தக்க மற்றும் நிலையான ஆற்றல் மற்றும் ஆற்றல் திறன் நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய ஆற்றல் மாற்றத்தை செயல்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க காலநிலை நிதி தேவைப்படும் எனவும் தெரிவித்தார்.

இங்கு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ள 193 நாடுகள் நீதியை நிலைநாட்டுவதற்கும், அமைதியைப் பேணுவதற்கும், முன்னெப்போதும் இல்லாத வகையில் சிக்கலில் உள்ள உலகில் முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கும் கூட்டாகப் பகிர்ந்து கொள்கின்றன என்பதை அவதானிக்க எனக்கு அனுமதியுங்கள். எங்களிடம் ஒரு சாசனம் மற்றும் ஒரு வலிமையான சர்வதேச சட்ட அமைப்பு உள்ளது, இதில் குடியரசு அரசியலமைப்பு மற்றும் பிற உள்ளூர் சட்டங்கள் ஆகியவை அடங்கும். இந்த அனைத்து நுட்பங்களும் இருந்தபோதிலும், பலதரப்பட்ட சவால்கள் எஞ்சியுள்ளன என்ற உண்மையை நாங்கள் நன்கு உணர்ந்துள்ளோம். இந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

அந்த அர்ப்பணிப்புக்குத்தான், இலங்கை இன்று உறுதியளிக்கிறது, நெருக்கடியை நாம் பயன்படுத்திக் கொண்டு, யாரையும் பின்தள்ளாமல், சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் புதிய எல்லைகளுக்கு உயர்வடையச் செய்வோம், மீண்டும் சிறப்பாகக் கட்டியெழுப்புவோம் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

# தள்ளுபடி செய்யுமாறு இலங்கை கோரிக்கை

நாடு கடனைத் திருப்பிச் செலுத்தாதது தொடர்பாக நியூயோர்க்கில் உள்ள ஃபெடரல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை தள்ளுபடி செய்யுமாறே இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

ஹமில்டன் ரிசர்வ் வங்கிக்கு, கடந்த ஜூலை 25ஆம் திகதி முதிர்ச்சியடைந்த 250 மில்லியன் டொலர் இறையாண்மைப் பத்திரங்களை 5.875 சதவீத வட்டியில் செலுத்த வேண்டியிருந்தது.

இலங்கைக்கு வழங்கிய சர்வதேச இறையாண்மை பத்திரங்களின் முழுத் தொகையையும் ஜூலை 25 ஆம் திகதிக்குள் வட்டியுடன் செலுத்துமாறு உத்தரவிடக் கோரியே ஹமில்டன் ரிசர்வ் வங்கி வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இலங்கையின் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கு, ராஜபக்ஷ குடும்பத்தினர் உள்ளிட்ட இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் திட்டமிட்டு ஏற்பாடு செய்ததாக செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸில் உள்ள ஹமில்டன் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்த வழக்கில், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் போது உள்ளூர் வங்கிகளின் இறையாண்மைப் பத்திரங்கள் குறித்து கவனம் செலுத்தத் தவறிவிட்டதாகவும் இது, இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளால் திட்டமிடப்பட்ட செயல் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் வங்கிகள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர் வைத்திருக்கும் இறையாண்மைப் பத்திரங்கள் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் இருந்து விலக்கப்பட்டதாக வங்கி குற்றம் சாட்டியுள்ளது.

# மூவருக்கு...

சோசலிச இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகரவும் நேற்று (25) பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மாளிகாகந்த நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# ஏரோ.ஃப்ளோட் சேவை ஒக். 9 முதல் ஆரம்பம்

ஜூன் மாதம் கொழும்புக்கு வருகை தந்த ஏரோஃப்ளோட் அயர்லாந்து நிறுவனத்தின் மனு காரணமான கொழும்பு வரர்த்தக நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர், அது நீக்கப்பட்டதுடன், அண்மையில் அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் விமான விவகாரம் குறித்து பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மணித்தியாலத்துக்கு 32 பேர் பறக்கின்றனர்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருதல், ஜனநாயகத்தை பாதுகாத்தல், தேசிய மற்றும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்தல் போன்ற உன்னத கொள்கைகளுடன் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பயணம் மேற்கொண்டு வருகின்றோம். அதேபோன்று மாதுளுவாவே சோபித்த தேரரின் கொள்கையையும் பிரச்சாரம் செய்து கொண்டு வருகின்றோம். இந்த பிரதேசத்தின் மத தலைவர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுநர்களை சந்தித்து நாட்டை கட்டியெழுப்புவதற்கு தேவையான கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெற்றுக் கொள்ளவுள்ளோம். நாட்டை கட்டி எழுப்புவதற்கு மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அண்மை காலங்களாக மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காத காரணத்தினால் நாட்டின் வீழ்ச்சி ஏற்பட்டு இருப்பதாக நாம் கருதுகின்றோம்.

எவ்வித மக்கள் பங்களிப்பும் இன்றி 2020இல் நிறைவேற்றப்பட்ட 20ஆவது அரசியல் அமைப்பு

# போஷாக்கு பிரச்சினையை...

இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தரவுகள் மற்றும் கணக்கெடுப்பின் முடிவுகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக நீடிப்பது தொடர்பான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானத்தினால், ஏற்கெனவே திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சைகள் உள்ளிட்ட விடயங்களுக்கு தடை ஏற்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர்களுடனான சந்திப்பின்போது தனக்கு தெரியப்படுத்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.



# அருள் தரும் நவராத்திரி

கல்வி, செல்வம், வீரம் எனும் முப்பெரும் செல்வங்களை வேண்டி துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களை அருள் வேண்டி, விரதத்துடன் நவராத்திரி அனுஷ்டிக்கப்படுகிறது.

முதல் மூன்று நாட்கள் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்கள் லட்சுமியையும், இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதியையும் வழிபடுவதுடன், 9 நாட்களும் கொலு வைத்து பூஜைகள் நடத்தப்படும்.

பத்தாவது நாளான விஜயதசமியன்று பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குதல், தொழில் தொடங்குவது, புதிய நற்காரியங்களில் ஈடுபடுவது என நல்ல செயல்கள் ஆரம்பிக்கப்படும்.

# ஜப்பான் செல்கிறார் ஜனாதிபதி ரணில்

இதனையடுத்து ஜப்பானிய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

அதன்பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் கூட்டத்துக்கு தலைமை தாங்குவதற்காக ஜனாதிபதி ரணில், எதிர்வரும் 28 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் செல்கின்றார்.

இதன் போது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங்பொங் மார்கஸ் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் விஜயங்களை நிறைவு செய்துகொண்டு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு திரும்புவார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே, ஊடக பணிப்பாளர் ஷானுக்க கருணாரத்ன, நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான பணிப்பாளர் ரந்துல அபேவீர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோர் இந்த விஜயத்தில் பங்கேற்கின்றனர்.

# சர்வாதிகாரியாக முயல்கிறார் ரணில்

கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அமைதியான போராட்டக்காரர்களை ஒடுக்குவதை விமர்சித்த அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் சுதந்திரத்தை முற்றாகப் பறித்து சர்வாதிகாரியாகச் செயற்பட முயல்வதாக குற்றம் சுமத்தினார்.

இந்த சீர்குலைப்பு நடவடிக்கைக்கு எதிராக நீதித்துறை, அரசியலமைப்பு ஆகியவற்றுக்குள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து மக்களை வீதிக்கு அழைத்துச் செல்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடக்குமுறை மூலம் நாட்டை ஆள முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பினால் அது வெறும் கனவு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனது பாதுகாப்புக்காக பல இராணுவத்தினரையும் பதுங்கு குழியையும் கூட வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, மக்கள் எதிர்ப்பால் தப்பியோட வேண்டி ஏற்பட்டதாக குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவும் உயர்பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தி தன்னை பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறார் என்றும் அவர் விரைவில் ஒரு பதுங்கு குழியில் ஒளிந்து கொள்ள வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவரது உயர் பாதுகாப்பு வலயங்கள் போராட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்படும் என்றும் அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

மக்கள் மீதான இந்த அடக்குமுறையை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்திய அவர், இந்த சீர்குலைக்கும் நடவடிக்கைக்கு எதிராக சகல நடவடிக்கைகளையும் எடுக்க தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

# லோகேஸ்வரனுக்கு 29வரை விளக்கமறியல்

மலையைச் சூழவுள்ள 632ஏக்கர் தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக்காணிகள் தொல்லியல் திணைக்களத்தால் அபகரிக்கப்படுகின்றமை மற்றும், குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த கட்டுமானங்கள் இடம்பெறுகின்றமை என்பவற்றைக் கண்டித்து கடந்த 21ஆம் திகதி குருந்தூர்மலையில் தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை மக்களால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்து கொண்ட கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில், சனிக்கிழமை (24) ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தொடர்பாக ஓர் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டும் என்று பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்தனர். இந் நிலையில் அவ்வாறு அடையாள அணிவகுப்புச்செய்வதற்கான தேவையில்லை எனவும், அவர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றமை தொடர்பிலான ஆவணங்களை

ஆயுர்வேத திணைக்களத்திடம்

## 3 ஆயிரம் கி.கிராம் கஞ்சா கையிருப்பில்

ආයුර්වේද දෙපාර්තමේන්තුව
DEPARTMENT OF AYURVEDA

ஆயுர்வேத திணைக்களத்திடம் தற்போது சிறந்த தரத்திலான தூய கஞ்சா 3 ஆயிரம் கிலோ கிராம் கையிருப்பில் உள்ளதாக அத்திணைக்களத்தின் தலைவர் வைத்திய சாகல அபேவிக்ரம தெரிவித்தார்.

வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் நீதிமன்ற வசமிருக்கும் சிறியளவிலான கஞ்சா ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்க ஆயுர்வேத திணைக்களத்திடம் வழங்கப்படுவதாகவும், திணைக்களத்துக்கு இந்த கஞ்சா கிடைக்கும் போது காலாவதியாகி தரம் குறைந்ததே கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருந்தகங்களுக்கு மருந்துகளை தயாரிப்பதற்காக 10 கிலோ கிராம் தூளாக்கப்பட்ட கஞ்சா விநியோகிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஆரம்பத்தில் கஞ்சா ஏற்றுமதிக்காக மாத்திரம் வளர்க்கப்படும். எனினும் படிப்படியாக உள்ளூர் ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்களுக்கும் இதனைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் ஆயுர்வேத திணைக்களத்தின் தலைவர் கூறினார்.





## பாராளுமன்ற உணவின் விலைகளும் கூடின

பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் வழங்கப்படும் உணவுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படிபாராளுமன்ற உறுப்பினர்களுக்குவழங்கப்படும் உணவின் விலை 100 ரூபாயாலும் ஊடகவியலாளர்களுக்கான உணவின் விலை 50 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

> **இதேவேளை பாராளுமன்றத்தில் வழங்கப்படும் உணவுகள், பானங்களுக்கு மாத்திரம் வருடமொன்றுக்கு சுமார் 15 கோடி ரூபாய் செலவிடப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதற்கு முன்னர் எம்.பிக்களது உணவு 200 ரூபாயாகவும், ஊடகவியலாளர்களுக்கான உணவு 100 ரூபாயாகவும் இருந்தது. தற்போது புதிய விலைகள் 300 ரூபாய் 150 ரூபாய் என அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பாராளுமன்றத்தில் வழங்கப்படும் உணவுகள், பானங்களுக்கு மாத்திரம் வருடமொன்றுக்கு சுமார் 15 கோடி ரூபாய் செலவிடப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தண்ணீருக்கு மாத்திரம் வருடமொன்றுக்கு பாராளுமன்றத்தில் 90 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது.



கஜேந்தரகுமாரும், விக்கியும்

# தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர்

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாதுள்ள நிலையில், சி.வி விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் தேசிய பேரவையில் இணைந்து கொண்டுள்ளமையானது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாடியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை களுத்துறையில் இடம்பெற்றது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே கூட்டமைப்பின் எம்.பி இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையிலான இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ராஜித்த சேனாரத்ன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றி சாணக்கியன் எம்.பி, பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்வதானது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.





## காலியிலும் கையெழுத்து...

பயங்கரவாத தடைச் சட்ட கையெழுத்து திரட்டும் நடவடிக்கை காலியில் மக்களின் பேராதரவுடன் நேற்று முன்தினம் (24) முன்னெடுக்கப்படுவதைப் படங்களில் காணலாம்...



# அமைச்சரவைக்கு வருகிறது கஞ்சா

இரத்தினபுரி மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் கஞ்சா வளர்ப்பதற்கான அனுமதியை சுகாதார அமைச்சர் கோர உள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதார அமைச்சின் ஊடாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியே இந்த யோசனையை அமைச்சரவைக்குக் கொண்டுவர உள்ளார். இதன்படி ஒக்டோபர் 5ஆம் திகதி நடைபெற உள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட உள்ளது.

கஞ்சாவுக்கான கேள்வி மேலைத்தேய நாடுகளில் அதிகமாக உள்ளது. நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இத்தருணத்தில் அதிகமான வருமானத்தை ஈட்டிக்கொள்ள கஞ்சா ஏற்றுமதி சிறந்த வழி எனவும் தெரிவித்தார்.



கஞ்சா தொடர்பில் நாட்டுக்குள் தவறான கருத்துகள் நிலவுகின்றன. புகைப்பதற்கு அப்பால் கஞ்சா பல்வேறு வழிகளில் பிரயோசனமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். குறிப்பாக ஆயுர்வேத மருத்துவத்தில் கஞ்சா பிரதான இடத்தை வகிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள்

# குற்றம் செய்தால் வழக்கு தொடர்வர்




புதிதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு குற்றச்செயல்கள் தொடர்பிலும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கான அதிகாரம் பொலிஸாருக்கு உள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான பாதிப்புகளுமின்றி நிர்வாகச் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாகவே புதிதாக உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஏற்பட்டதுபோல நிர்வாகச் செயற்பாடுகளை சீர்குலைய இடமளிக்கப்போவதில்லை. இதேவேளை பொலிஸ்மா அதிபர் அல்லது மேல்மாகாணத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் முன்கூட்டிய அனுமதிகளை பெறாது, உயர் பாதுகாப்பு வலயங்களில் போராட்டங்களை மக்கள் முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.



# முழுநாட்டையும் மொட்டு முட்டாளாக்கிவிட்டது

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பணத்தை அள்ளிவீசி செயற்கையாக கட்டமைக்கப்பட்ட பிரசாரப் பொறிமுறையின் ஊடாக மொட்டு கட்சியினர் முழு நாட்டையும் முட்டாளாக்கிவிட்டதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டம் கெஸ்பேவ தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று முன்தினம் (24) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்த தந்திரத்தால் முழு நாடும் கண்மூடித்தனமாக ஏமாந்ததாகவும், அதன் கோர விளைவாக வங்குரோத்து நாடு உருவாகியதாகவும் சஜித் மேலும் தெரிவித்தார்.

> **நான் தான் சிறப்பாகச் செய்தேன் எனக் கூறி முன்னாள் ஜனாதிபதி நாட்டை அழிவுக்குத் தள்ளினார். இன்று அதன் இரண்டாம் கட்டம் உருவாகியுள்ளது**

இவ்வாறான போலி அரசியல் கட்டமைப்புடன் அதிகாரத்தை பெற்ற மாவீரன் இந்நாட்டை அதள பாதாளத்துக்கு தள்ளிவிட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இன்று அதன் இரண்டாம் கட்டமாக பொம்மை ஆட்சியொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நான் தான் சிறப்பாகச் செய்தேன் எனக் கூறி முன்னாள் ஜனாதிபதி நாட்டை அழிவுக்குத் தள்ளினார். இன்று அதன் இரண்டாம் கட்டம் உருவாகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

# வெறும் வயிறுடன் வரும் மாணவர்கள் அதிகம்

கொழும்பு நகர பாடசாலைகள் மற்றும் நாட்டின் கஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் உணவு உட்கொள்ளாது வெறும் வயிறுடன் வரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

நாட்டில் மிக நீண்டக்காலமாக நிலவும் போசாக்குக் குறைபாடு பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னர் அதிகரித்துள்ளதோடு, 1.1 மில்லியன் மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தை அரசாங்கம் அமல்படுத்தியிருந்தபோதிலும் கடந்த இரு வருடங்களாக அத்திட்டம் அமல்படுத்தப்படவில்லை என ஆசிரியர் சேவை சங்கத்தின் நிறைவேற்று செயலாளர் விமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

> **1.1 மில்லியன் மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தை அரசாங்கம் அமல்படுத்தியிருந்தபோதிலும் கடந்த இரு வருடங்களாக அத்திட்டம் அமல்படுத்தப்படவில்லை**

உணவுப் பணவீக்கம் 90 சதவீதமாக இருக்கும் நிலையில் மாணவர்களின் உணவுக்காக 30 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை பிரயோசனமற்றதோடு, பெற்றோர்களின் வருமானமும் முற்றாக சரிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கிராமங்களை விட கொழும்பில் நிலைமை மோசமாகியுள்ளதாகவும் விமல் பியதிஸ்ஸ கூறினார்.



போராட்டக்காரர்கள் மீதான

# அடக்கு முறையை உடன் நிறுத்தவும்

ஹஸ்பர்

ஜனநாயக ரீதியான மக்கள் போராட்டத்தின் மீது பயன்படு த்தப்படும் அரசஎதிர்ப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டுமென கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (25) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு, பஞ்சம், ஊழல் மோசடிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்ற மக்கள் ஜனநாயக ரீதியான



போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

"இப்போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு வீச்சு, நீர்த் தாரைத் வீச்சு, கைதுகள், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தல் மற்றும் அதி உச்ச பாதுகாப்பு வலையப் பிரகடனம் என பல்வேறுபட்ட எதிர்ப்பு நடவடிக்கையை அரசு மேற்கொள்கின்றது.

"அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் பொதுமக்களது கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் உரிமை போன்ற விடயங்களில் இருக்கும் உரிமையை மறுக்கின்ற கண்டிக்கத்தக்க செயற்பாடுகளாகும்.

"எனவே, இவ்வாறான ஜனநாயாக போராட்டங்கள் மீது நடத்தப்படும் அரசியல் நோக்கங் கொண்ட மிலேச்சத் தனமான எதிர்ப்பு நடவடக்கைகளை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும்" என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சமாதான தலைவர்

# டொக்டர் ஜமீல் காலமானார்

வி.ரி சகாதேவராஜா, அஸ்லம் எஸ். மௌலானா



அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளன தலைவரும் சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கை பேரவையின் அம்பாறை மாவட்டத் தலைவருமான சாய்ந்தமருதைச் சேர்ந்த டொக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல், தனது 80ஆவது வயதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (24) காலமானார்.

சாய்ந்தமருது பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவராகவும் ஏனைய பல அமைப்புகளின் முன்னணி தலைவராகவும் செயற்பாட்டு, இன, மத பேதம் கடந்து பல சேவைகளை செய்தவர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர், இறுதியாக "தடங்களில் நினைவுகள்" என்ற சுயசரிதை நூலையும் வெளியிட்டுள்ளார்.

அன்னாரது இறுதி நல்லடக்கம், நேற்று முன்தினம் (24) இரவு சாய்ந்தமருது மயானத்தில் நடைபெற்றது.

உணவற்றோருக்கு

# உணவு வழங்கும் திட்டம்



ஹஸ்பர்

பொருளாதார நெருக்கடியால் நாள் ஒன்றுக்கு உணவை பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் 45ஆவது நாளையொட்டி, விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று, நேற்று (25) மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை 11 மணிக்கு கிண்ணியா - குட்டிக்கராச்சி சந்தியில் இவ்வூர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

கிண்ணியா இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உணவளிக்கும் திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பலர் உணவைப் பெற்றுக்கொண்டனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். ஹனி, உலமா சபையின் பிரதிநிதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஏழை மக்களுக்கு மற்றவர்களும் உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் கிண்ணியா - குட்டிக்கராச்சி சந்தியில் இருந்து கொழும்பு - திருகோணமலை பிரதான வீதியூடாக சென்று மீண்டும் உணவளிக்கும் இடத்தை ஊர்வலம் வந்தடைந்தது.

இதில் ஒரு நாள் உணவை பெற்றுக் கொள்ள முடியாத பலர் அரிசி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் தேங்காய் முதலானவற்றை பிரதேச செயலாளர் மற்றும் ஏற்பாட்டாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

மட்டு. புனித மிக்கேல் கல்லூரியின்

# 150ஆவது பாடசாலை தின நடைபவனி





ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 150ஆவது பாடசாலை தினத்தை முன்னிட்டு நடைபவனி, அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில், நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

இதனையடுத்து இடம்பெற்ற ஒன்றுகூடலில் பாடசாலைக்காக சேவையாற்றிய போல் சற்குண நாயகம் அடிகளாருக்கு, பாடசாலை சமுகத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவமளிக்கப்பட்டது.

பாடசாலையில் இருந்து பெருமளவான மாணவர்களுடன் நடைபெற்ற இந்த நடைபவனியானது, மட்டு. நகரின் பிரதான வீதிகள் ஊடாக சென்று பின்னர் பாடசாலையை மீண்டும் வந்தடைந்தது.

# முழுமையான தீர்வு கிடைக்கவில்லை



எம்.எஸ்.எம். ஹனீபா

அதிபர், ஆசிரியர்கள் முன்னெடுத்த தொடர்ச்சியான போராட்டத்தின் பின் நீண்ட நாள் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ள போதிலும் முழுமையான தீர்வு இதுவரை கிடைக்கவில்லையென, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் அம்பாறை மாவட்ட மாநாடு, சாய்ந்தமருது - மாளிகைக்காடு வாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "முழுமையான சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். நாம் வெற்றிகொள்ள பல்வேறு சவால்கள் உள்ளன.

"எமது சம்பள உயர்வில் மிகுதியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக மீண்டும் நாம் போராடுவதற்குத் தயாராக வேண்டும். சம்பள ஆணைக்குழுவிடம் இது தொடர்பாக நாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். சம்பள உயர்வை உடனடியாக வழங்குவதற்கான தீர்வை வழங்க வேண்டுமென அவர்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

கிளிநொச்சி மாவட்ட பால் பண்ணையாளர்களின்

# பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டுமா?

சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி மாவட்டத்தில் நாளொன்றுக்கு 16,000 லீட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இதில் 5,000 லீட்டர் வரையான பால் மட்டுமே உள்ளூர் நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

ஏனைய 16,000 லீட்டர் பாலும் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுவதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் அதிகளவு வாழ்வாதாரமாகக் கொண்ட ஒரு பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்பட்டாலும் உற்பத்தி செய்யப்படும் பாலையோ அல்லது விவசாய விளை பொருட்களுக்கோ உரிய சந்தை வாய்ப்பு அல்லது விலை கிடைப்பதில்லை என்பதாகும்.

மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அரைவாசியையாவது இந்த மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை பலரும் முன் வைத்து வருகின்றனர்.

பாலை மிக விரைவாகவும் உரிய நேரத்துக்கும் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற வசதிகள் இல்லையென்றும் அதனாலும் பாலை வெளியிடங்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாகவும் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ந்தும் பல்வேறு நெருக்குதல்களுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலைமை காணப்படுகிறது

கால்நடைகளுக்கான உரிய மேச்சல் நிலங்கள் இன்மை, உற்பத்தி செய்யப்படும் பாலுக்கான உரிய சந்தை வாய்ப்பின்மை, உரிய விலைகள் கிடைக்காமை காரணமாக பண்ணையாளர்கள் பல்வேறு நெருக்குதல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை கானப்படுவதாக தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.





# தியாக தீபம் ஊர்தி பவனி

தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து நேற்று (25) ஊர்தி பவனியொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகத்திலிருந்து நேற்றுக் காலை 11 மணியளவில் குறித்த ஊர்திபவனி ஆரம்பமானது.

இதன்போது தியாக தீபம் திலீபனின் உருவப்படத்துக்கு பலரும் அஞ்சலி செலுத்தினர். இந்த ஊர்திப் பவனியானது, யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணித்து, நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தை சென்றடைந்தது.

வி.நிதர்ஷன்

பால் புரைக்கேறி

# பத்து மாத சிசு மரணம்

யாழ்ப்பாணம் - வடமாராட்சி கிழக்கு செம்பியன்பற்று மாமுனை பகுதியில் பால் புரைக்கேறியதில் 10 மாதங்களேயான சிசு, நேற்று முன்தினம் (24) மரணமடைந்துள்ளது.

பால் கொடுக்கப்பட்ட போது புரைக்கேறி மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த சிசு பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிசு மரணித்துள்ளதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கற்களுக்குள் மறைத்து

# கடத்தப்பட்ட மர குற்றிகள் மீட்பு



எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

கற்களுக்குள் புதைத்து கடத்தப்பட்ட மரக்குற்றிகளை சாவகச்சேரி பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை (25) கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் டிப்பர் வாகனம் ஒன்றில் மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சந்தேகத்துக்கு இடமான முறையில் கற்களை ஏற்றி சென்ற டிப்பர் வாகனத்தை பொலிஸார் வழிமறித்து சோதனை நடத்தினார்கள்.

அதன்போது, டிப்பர் வாகனத்தினுள் மரக்குற்றிகளை ஏற்றி அதன் மீது கற்களை ஏற்றி, மரக்குற்றிகளை மறைத்து கடத்திச் செல்லப்படுவதை பொலிஸார் கண்டறிந்தனர்.

அதனை அடுத்து டிப்பர் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். மீட்கப்பட்டுள்ள மரக்குற்றிகளின் பெறுமதி சுமார் 20 இலட்ச ரூபாய் எனவும் , மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை, நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாளாந்தம் நூறுக்கும் மேற்பட்ட

# டிப்பர்களில் மணல் கடத்தல்

## விவசாயிகள் சாடல்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்புடன் நாளாந்தம் நூறுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த எடுத்துச் செல்லப்படுவதாக விவசாயிகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போதே, மேற்படி குற்றச்சாட்டு விவசாய அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோர பிரதேசமாகவும் அதிக விவசாய நிலங்களை கொண்ட பிரதேசமாகவும் காணப்படும் உருத்திரபுரம் குஞ்சுப்பரந்தன் நீவில் போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் மற்றும் விவசாய வீதிகள் வாய்க்கால்கள் என்பவற்றில் நாளாந்தம் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு டிப்பர் வாகணங்களில் கொண்டு செல்லப்படுகிறன.

> நாளாந்தம் 85 தொடக்கம் 100 க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மணல் கொண்டு செல்லப்படுகிறது

இதேபோன்று, புளியம்பக்கணை, ஊரியான் கோரக்கன் கட்டு ஆகிய பிரதேசங்களிலும் தினமும் நூறுக்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் தினமும் மணல் ஏற்றி செல்லப்படுகிறன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வுக்கான எந்தவிதமான அனுமதிகளும் இதுவரை வழங்கப்படாத நிலையில் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நாளாந்தம் 85 தொடக்கம் 100 க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மாவட்டத்திலிருந்து பெருமளவான மணல் கொண்டு செல்லப்படுவதாகவும் விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நிறைகளை சட்டெடை விழுங்கும் பேக்கரிகள்

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டனில் நகரிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் உள்ள பேக்கரிகளில் உற்பத்தி செய்து விற்கப்படும் பணிஸ் மற்றும் பாண் ஆகியவற்றினால் தாங்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக அந்த பேக்கரிகளில் தின்பண்டங்களை கொள்வனவுச் செய்த நுகர்வோர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சில பேக்கரிகளில் உற்பத்தி செய்யப்படும் பணிஸ், பாண் உள்ளிட்ட தின்பண்டங்களின் நிறைகள் குறைந்துள்ளன. எனினும், அந்தப் பொருட்களுக்கான விலைகள் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளன என்றும் அவர் தெரிவிக்கின்றன.

கொடுக்கும் பணத்துக்கு ஏற்றவகையில், தின்பண்டங்களை கொள்வனவு செய்யமுடியாதுள்ளது.



விலை அதிகரிப்புக்கு முன்னர், ஒரு வேளைக்கு ஒரு பணிஸை உட்கொண்டவர்கள், தற்போது இரண்டு அல்லது மூன்று பணிஸ்களை உட்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அந்தளவுக்கு நிறை குறைந்து காணப்படுகின்றது.

குறைந்த செலவில், ஒரு வேளைக்கு ஒரு பணிஸை உட்கொண்டு பசியை ஆற்றிக்கொண்வர்கள், தற்போது ஒரு பணிஸை கூடுதல் விலைக்கு அதுவும், மூன்று பணிஸ்களை உட்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு உண்டலும். பசியை ஆற்றமுடியாது உள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

சாதாரணமாக ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராம் இருக்கவேண்டும். சில பேக்கரிகளில் உற்பத்தி செய்யப்படும் பாணின் நிறை 370 கிராமுக்கும் 400 கிராமுக்கும் இடைப்பட்ட நிறையிலேயே இருக்கின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் போதெல்லாம், அவற்றின் விலைகளை காரணம் காட்டி, உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரித்துக்கொண்டு, உரிய நிறைக்கு ஏற்றவகையில் பொருட்களை தயாரிக்காத பேக்கரிகள் தொடர்பில் அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒருசில பேக்கரிகள் மட்டுமன்றி, தள்ளுவண்டியில் விற்பனைச் செய்வோரும் ஒன்று கடதாசி பொதிகளின் நீள, அகலத்தை குறைத்துக்கொண்டுள்ளனர். இன்றேல், பொருட்களின் அளவை குறைத்துவிடுகின்றனர். இதனால், தாங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகுவதுடன், பிள்ளைகளுக்கு விரும்பிய தின்பண்டங்களை கொள்வனவு செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம் என்றனர்.

# சிறு செய்திகள்

மலையகத்தில் ஆங்காங்கே இரண்டொரு நாட்களில் இடம்பெற்ற சம்பவங்களை உள்ளடக்கிய சிறு செய்திகள்...

## 16 பேர் கைது

எல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எல்ல காட்டுக்கு தீ மூட்டினர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் இதுவரையிலும் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார் அவர்கள் அனைவரையும் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

சனிக்கிழமை (24) மாலை வேளையிலேயே இவர்கள், அந்த காட்டுக்கு தீ மூட்டியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட அனைவரும் 16 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதுடன், பதுளை, ஹாலி-எல மற்றும் நமுனுகுல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மண்ணில் புதையுண்டு ஒருவர் மரணம்

கேகாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பியாஸ்லோ எனுமிடத்தில் இடம்பெற்ற மண்சரிவுக்குள் சிக்குண்டு ஒருவர் மரணமடைந்துள்ளார். 40 வயதான கட்டிட நிர்மாணிப்பாளரான இவர், அத்திபாரத்தை வெட்டிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம், சனிக்கிழமை (24) இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட அவர், கேகாலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தாமரை பறித்தவர் மரணம்

பிபில நாகல வாவியில் தாமரை மலர்களை பறித்துக்கொண்டிருந்த 62 வயதான ஒருவர், குளத்தில் மூழ்கி மரணமடைந்துள்ளார். இவ்வனர்த்தம் சனிக்கிழமை (24) இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# செனன் விபத்தில் 5 பேர் தப்பினர்

ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பில் இருந்து நுவரெலியாவை நோக்கி பயணித்த வானொன்று, கொழும்பு- ஹட்டன் பிரதான வீதியில் செனன் பிரதேசத்தில் வைத்து வீதியிலேயே விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

எனினும், அதில் பயணித்த ஐவரும் எவ்விதமான பாதிப்புகளும் இன்றி தப்பியுள்ளனர்.

இவ்வனர்த்தம் நேற்று (25) மாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அந்த வானில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பயணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிக வேகத்தில் பயணித்த போது, சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால், வாகனத்தை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரமுடியாமல் போயுள்ளது என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், சம்பவத்தில் யாருக்கும் எவ்விதமான காயங்களும் ஏற்படவில்லை எனினும், வாகனத்துக்கு கடுமையான சேதம் ஏற்பட்டள்ளது என்றனர்.

# இரத்ததானம்



பொரகாஸ் வை எம் எம் ஏ அமைப்பினரின் ஏற்பாட்டில் பொரகாஸ் நகரிலுள்ள பள்ளிவாசலில், இரத்ததானம் முகாம் சனிக்கிழமை (25) நடைபெற்றது. இந்த முகாமில், 65 பேர் கலந்துக்கொண்டு இரத்ததானம் செய்தனர். (எஸ். கே. குமார்)

# போதைப்பொருள்கள் விற்ற மூவர் கைது

துஷித குமார டி சில்வா

ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களை விற்பனைச் செய்தவர்கள் உள்ளிட்ட சந்தேகநபர்கள் மூவர், தர்ஹா நகரில் வைத்து அளுத்கம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து12 கிராம் 120 மில்லிகிராம் ஹெரோய்ன், 4 கிராம் 910 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த 29 ஆயிரம் ரூபாய் பணம், கையடக்க தொலைபேசிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களின் பெறுமதி 4 இலட்சம் ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# ‘ஒருவர் மரணித்த பின்னரும் ஏதாவது எஞ்சி இருக்க வேண்டும்

## புத்தக வெளியீட்டு விழாவில் அமரசிரி உரை

மொஹமட் ஆஸிக்

ஒருவர் மரணித்த பின்னும் உலகில் ஏதாவது எஞ்சி இருக்க வேண்டும். கற்றுக் கொடுத்த கல்வியும், கற்றுக்கொண்ட மாணவனும். ஆசிரியர் தொழிலும் உள்ளன. மேலே காட்டிய மூன்று விடயங்களும் முப்தி யூசுப் அனீபா எழுதிய ‘ஆசிரியம் ஓர் இறைவணக்கம்’ என்ற தமிழ் மற்றும் சிங்கள மொழிப்பெயர்ப்பில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்று பிரதம அதிதியாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ஜி. அமரசிரி பியதாச

இஸ்லாமிய அறிஞரான முப்தி யூசுப் ஹனீபா எழுதிய ‘ஆசிரியம் ஓர் இறைவணக்கம்’ என்ற நூல், அதன் சிங்கள மொழியெர்ப்பு வெளியீட்டு விழா கண்டி பத்யுதீன் மஹமூத் கல்லூரியில், சனிக்கிழமை (24) இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ஜி. அமரசிரி பியதாச மற்றும் விழாவில் சிறப்புப் பேச்சாளராக மத்திய மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் ஏ.எல். எம். சாருதீன் ஆகியோரும் கலந்கொண்டனர்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ஜி. அமரசிரி பியதாச உரையாற்றுகையில்,



நற்செயல்களை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ‘இபாதத்’ என்பார்கள். பொதுவாக நற்செயல்கள் எனும் போது வணக்க வழிபாடுகள்தான் நற்செயல் என நினைப்பவர்கள்தான் அதிகம். வணக்க வழிபாடும் நற்செயல்தான். ஆனால், அதனை விடவும் நாம் கட்டாயம் பின் பற்ற வேண்டிய நற்செயல்கள், தார்மீக அடிப்படையில் உள்ளன. அவற்றை நாம் மறந்து விடுகிறோம் என்றார்.

ஓர் ஆசிரியரைப் பொறுத்தவரை கற்பித்தலுக்கு அப்பால் அவரிடம் பல விடயங்களை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. மாணவர்ளை நல்வழிப்படுத்துவது. அவர்களுக்கு வழிகாட்டுவது போன்ற அனேக அம்சங்கள் நற் கருமங்களில் உள்ளன. வெறுமனே சமய வழிபாட்டுத்தளங்களுக்கு மட்டும் சென்று வழிபாட்டில் ஈடுபடுவதை மட்டும் நாம் நற்காரியங்கள் என்று சொல்ல முடியாது என்றார்.

இது போன்ற பல விடயங்களில் நாம் நற்கருமங்களைச் செய்து எமது சமூகப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு அநேகர் நிறைவேற்றுவதாக இக்காலத்தில் எதிர்பார்க்க முடியாதுள்ளது. அப்படிசெய்தால்தான் அவற்றை இபாதத் அல்லது நற்கருமங்கள் என்று கூற முடியும் என்றார்.

# அதிகாலையில் ‘குவா, குவா’ திருமணம் ஆகாத பெண் கைது

பி.கேதீஸ்

அதிகாலையில், குளிர் தாங்கமுடியாது ‘குவா, குவா’ வீரிட்டு அழும் சத்தம் கேட்டதை அடுத்து விரைந்து செயற்பட்ட பொதுமக்கள், பிறந்து சிலமணி நேரங்களேயான சிசுவை மீட்டெடுத்து பொலிஸார் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்ப்பித்த சம்பவமொன்று தலவாக்கலையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், திருமணமாகாத பெண்ணொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். அப்போது அந்தப் பெண்ணுக்கு கடுமையான இரத்தப் போக்கு ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


இந்த சம்பவம், வட்டகொட யொக்ஸ்போர்ட் பிரதேசத்திலுள்ள கடையொன்றின் அருகாமையில் சனிக்கிழமை (24) அன்றி, துணிகளால் சுற்றி, தரையில் கிடந்தவாறே மீட்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4 மணியளவில் குழந்தையொன்று அழும் சத்தம் மற்றும் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு அருகிலிருந்த கடையிலிருந்தவர், வெளியே வந்த பார்த்துள்ளார். அப்போது, சிசுவொன்று இருப்பதை கண்டு, அக்கம்பக்கத்தினருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

குளிர்தாங்க முடியாது சிசு வீரிட்டு அழுத்துள்ளது. அதனால், அங்கிருந்தவர்களில் ஒருவர் அந்த சிசுவை வீட்டுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பு அளித்துள்ளார்.

அதன்பின்னர், மேற்படி சம்பவம் தொடர்பில், 119 அவசர அம்புலன்ஸ் சேவை மற்றும் தலவாக்கலை பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நடவடிக்கை எடுத்தனர்.

சிசுவை மருத்துவ



> கைது செய்யப்படும் போது பெண்ணுக்கு கடும் இரத்தப்போக்கு ஏற்பட்டதால், அப்பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிசு தற்போது நலமுடன் இருப்பதாக நுவரெலியா பொது வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், அதே பிரதேசத்தில் வசிக்கும் திருமணமாகாத பெண் ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். கைது செய்யப்படும் போது பெண்ணுக்கு கடும் இரத்தப்போக்கு ஏற்பட்டதால், அப்பெண்ணை லிந்ததுலை பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக அனுமதித்து, பின்னர் நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவித்த தலவாக்கலை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# நீரில் மூழ்கி மாணவன் மாயம்



பயாகல வடக்கு பிரதேசத்தில், நண்பர்கள் இருவருடன் நீராடிக்கொண்டிருந்த 17 வயதான மாணவன், நீரில் அள்ளுண்டு செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார் என பயாகல பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை 24 ஆம் திகதியன்று அவருக்கு பிறந்த நாள், அந்த நாளை கொண்டாடுவதற்காக நண்பர்கள் இருவர் வீட்டுக்கு வந்துள்ளனர். அவர்களுடன் நீராட சென்றிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அந்த மூவரும் கரையோரத்தில் நீராடிக்கொண்டிருந்துள்ளனர். எனினும், பாரிய அலையொன்றில் சிக்குண்டதன் பின்னரே அவர் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அந்த மாணவனை தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என பயாகல பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரையோரத்தில் நீராடிக்கொண்டிருந்தவர்களில் இருவர், கடலலையில் இழுத்துச் செல்லப்பட்டு கடந்தவாரம் காணாமல் போயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2 கஜமுத்துகளை விற்க முயற்சி

மஹேஸ் கீர்த்திரத்ன

இரண்டு கஜமுத்துக்களை 2 கோடி ரூபாய்க்கு விற்பனைச் செய்வதற்கு முயன்ற கடற்படையின் சிப்பாய் ஒருவர் உட்பட ஐவர், மாத்தளை நாவுல பகுதியில் வைத்து, மாத்தளை பிரிவு ஊழல் ஒழிப்பு பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

மாத்தளை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல்கள் அடிப்படையில், ஊழல் ஒழிப்பு பிரிவினர், வெள்ளிக்கிழமை (23) மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுக்கு கஜமுத்து கிடைத்தது எவ்வாறு என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாக தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்கள், கல்கமுவ, குண்டசாலை, குருதெனிய, பிங்கிரிய உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.



# மாணவ சமுதாயத்தைக் காக்க வேண்டியது பொறுப்பு அனைவருக்கும் உண்டு

யாழ்ப்பாணத்தில், க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் நான்கு மாணவர்கள், தனியார் கல்வி நிலையத்துக்கு செல்வதாகக்கூறி, நண்பனின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக மதுபானமும் போதைப்பொருளும் பயன்படுத்தியதை அடுத்து, கைது செய்யப்பட்டு பின்னர், எச்சரிக்கப்பட்டு, பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளார்கள்.

மகிழ்ச்சியின் போதோ, துன்பத்தின் போதோ 'பார்ட்டி' என்ற பெயரில் போதையை ஏற்றிக் கொள்ளும் ஒரு 'கீழ்மட்டக் கலாசாரம்' நம்மத்தியில் வேகமாகப் பரவிவருகின்றமை கவலையளிப்பதாக உள்ளது.

கடந்த மூன்று மாதத்தில் மட்டும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 11 பேர் உயிரிழந்தும் 140 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றும் உள்ளனர். தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றோர், இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

அண்மையில், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பது தொடர்பான கலந்துரையாடலில், போதைப்பொருள் பாவனை, விநியோகம் போன்ற நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டிய பொறுப்புமிக்க திணைக்களங்கள், அசமந்தமாக இருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது.

போர் நிறைவுற்ற 2009 ஆண்டுக்கு பின்னரே, இவ்வாறு யாழ். குடாநாட்டில் போதைப்பொருள் பாவனை அறியப்பட்டதாக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக, 'இனவிடுதலை சிந்தனையை மழுங்கடிக்கும் நோக்கத்திலேயே, இளைஞர்கள், மாணவர்களை மையப்படுத்தி, போதைப்பொருள் உலாவவிடப்பட்டு உள்ளதாக சமூகவியலாளர்களால் கூறுகின்றார்கள். இதில், உண்மை இல்லாமலில்லை; ஏனெனில், மூன்று பொதுமக்களுக்கு ஒரு படை வீரன் என்ற வீதத்தில், மிக அடர்த்தியாக படையினர் நிலைகொண்டிருக்கிறார்கள். எனவே, பொலிஸ், முப்படைகளின் ஆதரவு இன்றி, போதைப்பொருள் விநியோகத்தை மேற்கொள்ள முடியாது.

இன்றைய வாழ்க்கைச் செலவு அகரிப்பை ஈடுசெய்யும் பொருட்டு, பெற்றோர் இருவருமே வேலைக்குச் செல்லும் நிலையில், பிள்ளைகள் மீதான அவர்களின் கவனம் வெகுவாகக் குறைகின்றது. தன்பிள்ளையை தன்னால் சரியாகக் கவனிக்க முடியவில்லையே என்ற குற்ற உணர்வால் தூண்டப்படும் இவர்கள், பிள்ளைகளைக் கண்டிக்காமல் அவர்கள் கேட்கும் போதெல்லாம், காரணம் கேட்காமல் பணம் கொடுத்து விடுகிறார்கள். அதிக பணம் கையில் புளங்குவதால், தம்மிஷ்டப்படி மாணவர்கள் வாழத் தலைப்படுகிறார்கள். பலர் வழிதவறி, தீய வழிகளில் சென்றுவிடுகிறார்கள்.

பாடசாலைகளிலும் வீடுகளிலும் மாணவர்களின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து, ஆசிரியர்களும் பெற்றோரும் துல்லியமாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும். நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர்களின் மதிப்பெண் திடீரென குறைதல், உடல்நிலையில் மாற்றம், செயற்பாடுகளிலும் உரையாடல்களிலும் மாற்றம், பெறும் மதிப்பெண்களில் மாற்றம், ஏதேனும் சாட்டுச்சொல்லி அடிக்கடி பணம் கேட்கின்றார்களா, சேரும் நண்பர்களின் நடவடிக்கைகள் என்பவை குறித்தும் பெற்றோரும் ஆசிரியர்களும் உடனிருக்கும் நண்பர்களும் அக்கறை செலுத்த வேண்டும்.

பிள்ளைகளின் போதைப்பொருள் பழக்கத்துக்கு பெற்றோர் அடுத்தவரைக் குற்றம் சொல்வதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. பிள்ளைகள் போதைப்பழக்கத்துக்கு அடிமையாகின்றார்கள் என்றால், அதற்கான முழுப்பொறுப்பும் பெற்றோரையும் ஆசிரியர்களையுமே சாரும். அனைவருடைய ஒத்துழைப்புடனும் மாணவ சமுதாயத்தைக் காக்க வேண்டியது மிகமிக அவசியமானதும் முக்கியமானதுமான பொறுப்பு அனைவருக்கும் உண்டு.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நன்றி மறப்பது சிறந்த வழி என அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். பெரிய கட்சிகளில் ஒருவழியாகச் சேர்ந்து, மக்களிடம் கெஞ்சிக் கூத்தாடி, தேர்தல்களில் வெற்றியடைந்து, ஒருவழியாக அமைச்சர்களாவும் ஆகிவிடுகிறார்கள்.

பின்னர், அவர்சார்ந்த ஆட்சி கவிழ்ந்தால், வெற்றியடையப் போகும் மற்றக் கட்சிக்கு பொய்களை அவிழ்த்து, எப்படியோ கட்சி மாறிவிடுகின்றார்கள். இவர்கள், முன்பிருந்த கட்சியையும் தலைவரையும் தூற்ற ஆரம்பித்தும் விடுகிறார்கள்.

தன்னை நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றிவிடுபவர்கள், தங்களது சாமர்த்தியத்தை தாங்களே எண்ணி, திருப்தியும் பெருமையும் அடைந்துகொள்வார்கள்.

மக்களை ஏமாற்றுபவர்கள், தங்கள் பாணியை மாற்றிக் கொள்வதுமில்லை; மக்களும் திருந்துவதும் இல்லை. உண்மைகளை உணர்ந்த மக்கள், தலையில் கையை வைக்கின்றனர். பதவி கிடைத்ததும் மக்களை அடிமைகள் என எண்ணும் நிலை இன்னமும் மாறவே இல்லை.

நாடு முன்னேறவில்லை எனக் கவலைப்படுகின்றோம். மக்கள், தாங்கள்தானே வாக்களித்து, அரசாங்கத்தை உருவாக்குகின்றார்கள் என்பதை உணருவதே இல்லை. அனுபவங்கள் மூலம் திருந்த வேண்டும். திருத்தாத அனுபவத்தால் ஏது பலன்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானை வேலிகளை அமைத்துத்தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தென்னியன்குளம், கோட்டைகட்டியகுளம், உயிலங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் தொடரும் காட்டு யானைகளின் தொல்லைகளால், மேற்படி கிராமங்களில் வாழும் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது, தென்னியன்குளம் கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால், தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். தென்னியன்குளம் கிராமத்தில் தற்போது வாழும் 128 வரையான குடும்பங்களும் விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்களாவே காணப்படுகின்றன.

இதனைவிட, முழங்காவில், மல்லாவி போன்ற பகுதிகளில் வசிக்கும் பலருக்கும், தென்னியன்குளத்தில் விவசாயக் காணிகள் உள்ளன. அவர்களும் தமது காணிகளில் பயிர் செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏறத்தாள 916 ஏக்கர் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றன. இதைவிட, தோட்டச்செய்கைகள், உழுந்து, பயறு என்பனவும் பயிரிடப்பட்டு வருகின்றன. காட்டு யானைகள், விவசாயக் காணிகளுக்குள்ளும் குடிமனைகளுக்குள்ளும் புகுந்து, அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

எனவே, குடிமனைகளையும் வாழ்வாதாரங்களையும், காட்டு யானைகள் நாசம் செய்வதில் இருந்து பாதுகாக்க, யானை வேலிகளை அமைத்துத்தருமாறு, மேற்குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள், தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வருகிறார்கள்.

யது பாஸ்கரன்

# ராஜபக்‌ஷர்களின் ஆதரவுத்தளமும் அரசியல் எதிர்காலமும்



என். கே அஷோக்பரன்
twitter: @nkashokbharan

கோட்டாபய ராஜபக்‌ஷவின் பதவி விலகலோடு, ராஜபக்‌ஷர்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்று எவரேனும் எண்ணினால், அது தவறு. ராஜபக்‌ஷர்கள் என்போர், அடுத்த 'பண்டாரநாயக்காக்கள்'. அவர்களை, குடும்ப அரசியல் என்ற அடையாளத்துக்குள் சுருங்கிப்பார்ப்பது தவறாகும்.

ராஜபக்‌ஷர்கள் முன்னிறுத்தும் அரசியலுக்கான ஆதரவுதான், ராஜபக்‌ஷர்களுக்கான ஆதரவு என்பதைப் புரிந்துகொள்ளுதல் இங்கு அவசியம். இலங்கை அரசியல் இன்றும் இனத்தேசிய அடிப்படைகளில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. பெருந்தேசியவாதத்தின் சமகால முகம் ராஜபக்‌ஷர்களே! அந்த அடிப்படைகளில் கட்டமைந்ததுதான், அவர்களின் ஆதரவுத்தளம்.

ராஜபக்‌ஷர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள், மோசடிக் குற்றச்சாட்டுகள், மோசமான ஆட்சி என இத்தியாதிகள் எல்லாம், அவர்களின் ஆதரவுத்தளத்தின் ஒரு பகுதியைத் தற்காலிகமாகக் குறைக்குமேயன்றி, இவை அவர்களது அடிப்படை ஆதரவுத்தளத்தைத் தகர்க்கப்போவதில்லை என்பது துரதிர்ஷ்டவசமான யதார்த்தம்.

மஹிந்த ராஜபக்‌ஷ, 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நான்கரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் தோல்வி கண்டார். ஆனாலும் மேல்மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களின் சில பகுதிகள், வடக்கு-கிழக்கு தவிர்ந்த பெரும்பான்மையான ஏனைய பகுதிகளில் மஹிந்த ராஜபக்‌ஷதான் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். இலங்கையின் வாக்குவங்கியின் இனவாரியாகவும் பிரதேசவாரியாகவும் அமைந்த இந்தத் தன்மையை நாம் மறந்துவிடக்கூடாது.பெரும்பான்மையின வாக்குவங்கியினுள், கணிசமான வாக்குகள் பெருந்தேசியவாத ஆதரவு வாக்குகள்தான். அந்த வாக்குகள்தான், தற்போது ராஜபக்‌ஷர்களின் நிரந்தர வாக்குகள்.

அதற்கடுத்தபடியாக, கட்சி ரீதியாக ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக கணிசமான வாக்குகள் இருக்கின்றன. இவை ஒருபோதும் ராஜபக்‌ஷர்களுக்கு விழாத வாக்குகள். ஜே.வி.பி போன்ற இடதுசாரிகளுக்கான வாக்குகள் இதற்குள் அடங்கும். இவர்களுக்கு ராஜபக்‌ஷர்களுக்கு மாற்றானவர்கள் மீது பிடிப்பு இல்லாவிட்டால், வாக்களிக்காமல் தவிர்ப்பார்களேயன்றி, ராஜபக்‌ஷர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

அடுத்தபடியாக பொருளாதாரம், ஆதரவு அலை, சமகால அரசியல் அலை என்பவற்றால் எல்லாம் செல்வாக்குக்கு உட்படும் ஒரு வகையான 'ஊசலாடும்' வாக்குவங்கியாகும். கிட்டத்தட்ட இந்த வாக்குவங்கிதான், பெரும்பான்மையின வாக்குவங்கியின் தீர்மானம் மிகு வாக்குகள் எனலாம்.

இந்த வாக்குவங்கி ராஜபக்‌ஷர்களுக்கு ஆதரவாக அமையும் போதுதான், ராஜபக்‌ஷர்களுக்கு பெருவெற்றி கிடைக்கிறது. ஆனால், இந்த வாக்குவங்கி பெரும்பாலும் நகர்ப்புற வாக்குவங்கியாகவே அமைகிறது.

இந்த இடத்தில், நகர்ப்புற மற்றும் கிராமப்புற வாக்குவங்கிகளுக்கு இடையிலான வேறுபாட்டை புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. நகர்ப்புற வாக்குவங்கியின் தேவைகள், முன்னுரிமைகள் ஆகியன, கிராமப்புற வாக்குவங்கியின் தேவைகள், முன்னுரிமைகள் என்பவற்றில் இருந்து பெரிதும் வேறுபட்டவையாகும்.

இந்த இரண்டு வாக்குவங்கிகளினதும் வாழ்கை முறைகள், வாழ்வியல் விழுமியங்களில் கூட நிறைய வேறுபாடுகள் உள்ளன. ராஜபக்‌ஷர்களின் அரசியலைப் புரிந்துகொள்வதற்கு, இந்த நுட்பங்களைப் புரிந்துகொள்ளுதல் அவசியம்.

ஏனென்றால், ராஜபக்‌ஷர்களின் அரசியல் என்பது, அவர்களது ஆதரவுத்தளமாக அவர்கள் வரையறுத்துக் கொண்டவர்களுக்கான அரசியல். அது பெருமளவுக்கு இலங்கையின் பெருநகர் அல்லாத 'சிங்கள- பௌத்த' வாக்குவங்கியை மையப்படுத்தியது. அதனால்தான், 2015 ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த, 2015 ஒகஸ்ட் 17ஆம் திகதி நடந்த பாராளுமன்றத் தேர்தலில், குருநாகல் மாவட்டத்தில், 423,529 விருப்பு வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

ஐக்கிய தேசிய கட்சியில், குருநாகல் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற அகில விராஜ் காரியவாசம், பெற்றுக்கொண்ட வாக்குகள் 286,755. மஹிந்தவின் கட்சியில் இரண்டாமிடம் பிடித்த தயாசிறி ஜயசேகர பெற்றுக்கொண்ட வாக்குகள், 133,532.

2015ஆம் ஆண்டு, பாராளுமன்றத் தேர்தலை எடுத்துக்கொண்டால் கூட, மேல் மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணத்தின் சில பகுதிகள் மற்றும் வடக்கு-கிழக்கு தவிர்ந்த பெரும்பான்மையான ஏனைய பகுதிகளில் எல்லாம், ராஜபக்‌ஷ மற்றும் சுதந்திரக் கட்சி கூட்டுத்தான் வெற்றிபெற்றிருந்தது.

ராஜபக்‌ஷர்களுக்கு பொருளாதார அறிவு இல்லாமல் இருக்கலாம்; நாட்டை முறையாக ஆட்சி செய்யத் தெரியாதிருக்கலாம்; மிக முட்டாள்தனமாக முடிவுகளால், இலங்கையின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கும் நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுக்கலாம். ஆனால், அவர்களுக்கு வாக்குவங்கி அரசியல் நன்றாகவே தெரிந்திருக்கிறது. அந்த ஆட்டத்தை அவர்கள் மிகச் சிறப்பாகவே ஆடிக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் ராஜபக்‌ஷர்கள் முடிந்தார்கள் என்று நினைக்கும் போதெல்லாம், ராஜபக்‌ஷர்கள் மீண்டும் மீண்டும் எழுந்து கொண்டிருக்கிறார்கள்.

கோட்டாவின் பதவி விலகலைக் கூட, ராஜபக்‌ஷர்கள் ஒரு பின்னடைவாகவே கருதுவார்கள். அவர்களுக்குத் தெரியும் இது முற்றுப்புள்ளியல்ல; வெறும் காற்புள்ளிதான் என்று! இதற்குக் காரணம் இலங்கையின் இனவாரி வாக்குவங்கி மீது, அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை.

இன்று கொழும்பு உள்ளிட்ட பெருநகரங்களில், ஆங்கிலம் பேசும் பெரும்பான்மையின மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பேரினவாத அரசியலுக்கு எதிரான பிரக்ஞையை, இலங்கையின் அனைத்து பெரும்பான்மையின மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பிரக்ஞை என்று பொருள் கொள்வது அறிவீனமானது. இந்தப் பொருளாதார நெருக்கடியும் அரசியலில் ஊழல் பற்றிய விழிப்புணர்வும், இலங்கையின் இனவாத அரசியல் கலாசாரத்தை மாற்றிவிடும் என்பதெல்லாம் வெறும் கனவுதான்.

அடுத்த தேர்தலில், தாம் பெரும்பான்மையைப் பெறப்போவதில்லை என்று ராஜபக்‌ஷர்களுக்குத் தெரியும். ஆனால், ஐக்கிய தேசிய கட்சி 2019ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பெருந்தோல்வி கண்டதுபோல, ராஜபக்‌ஷர்கள் ஒருபோதும் தோற்க மாட்டார்கள். காரணம், அவர்களுக்கு பேரினவாதம் மீதும், இலங்கையின் பேரினவாத வாக்குவங்கியின் மீதும் அளவற்ற நம்பிக்கை இருக்கிறது.

இதனால்தான், "ராஜபக்‌ஷர்கள் கைது செய்யப்பட வேண்டும்; அவர்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டும்" என்று சில தாராளவாதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்வோர் சொல்லக்கூடும். நாட்டினுடைய சாதாரண மக்கள் வாக்குவங்கியின் தன்மை, யதார்த்தம் பற்றியெல்லாம் புரியாத கருத்து இது.

இன்றைய சூழலில், ராஜபக்‌ஷர்களின் அரசியலுக்குச் செய்யக் கூடிய 'மெத்தப் பெரிய உபகாரம்' அவர்களை சிறையில் அடைப்பதுதான். சிறையில் அடைத்தல் என்பது, அரசியலைப் பொறுத்தவரையில் பல மோசனமானவர்களைப் புனிதமாக்குகிற செயலாகவே இருக்கிறது. அதிலும் குறிப்பாக, இனத்தேசிய அரசியலை, அரசியல் கலாசாரமாகக் கொண்ட ஒரு நாட்டில், அதுவேதான் நடக்கும். அப்படியானால் இதற்கு என்ன வழி?

ராஜபக்‌ஷர்கள் இழைத்த அநீதிகளுக்கு என்ன நியாயம் என்று கேட்கலாம். மாற்றம் மக்களிலிருந்து உருவாக்கப்பட வேண்டும். பௌத்த - சிங்கள மக்களுக்கு, பேரினவாதத்தைத் தாண்டிய அரசியல் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

ஒரு குழுநிலை அடையாளத்துக்குள் ஈர்க்கப்பட்டுள்ள, அதையே தம்முடைய அரசியலாகக் கொண்டுள்ள சமூகமொன்று காலப்போக்கில், அதன் தலைவர்களைப் புனிதமாக்கத் தொடங்கும். களங்கங்கள் வெற்றுக் கண்ணுக்குத் தென்பட்டாலும், பகுத்தறிவுக்குப் புலப்பட்டாலும், அந்தத் தலைமைகளை புனிதத்துவப்படுத்திய மனநிலையானது, அந்தத் தலைமைகளை விமர்சனத்துக்கும், விசனத்துக்கும் அப்பால் ஒரு வழிபாட்டு நிலையிலேயே கொண்டு சென்று வைத்துவிடும்.

இது, அந்த மக்களுக்கும் தலைமைகளுக்கும் ஆபத்தானது. மக்கள் தமது தலைமைகளின் தவறைக் காண்பதில்லை; அல்லது, கண்டும் காண்பதில்லை என்பது கிட்டத்தட்ட தற்கொலைக்குச் சமமானதொன்று! புனிதப்படுத்தப்படும் தலைமைகள், தன்னிலையை மறந்துவிடுகிறார்கள். அவர்களிடம் '*god complex*' உருவாகிவிடுகிறது.

இந்த நிலையில்தான், இன்று இலங்கையின் பேரினவாத அரசியல் வாக்கு வங்கியும் ராஜபக்‌ஷர்களும் இருக்கிறார்கள். இங்கு, ராஜபக்‌ஷர்களை தொடர்ந்தும் காப்பாற்றிக் கொண்டிருப்பது, அவர்களைப் புனிதப்படுத்தி வைத்திருக்கும், இலங்கையின் பேரினவாத வாக்குவங்கிதான்.

'அறகலய'வின் போது சத்தமாகக் கேட்ட ஒரு பத்து இலட்சம் ஆர்ப்பாட்டக்காரர்களின் குரல், ராஜபக்‌ஷர்களை எதிர்த்தது என்றால், ராஜபக்‌ஷர்களுக்கு ஆதரவளித்த ஐம்பது இலட்சம் குரல்கள் அமைதியாகவே இருந்தன என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த அமைதியை 'அறகலய'வுக்கான ஆதரவு என்று கருதுவது, அரசியல் அறியாமை.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், பேரினவாத அரசியல் இருக்கும் வரை, ராஜபக்‌ஷர்கள் என்ற பேரினவாத அரசியல்வாதிகள் இருந்துகொண்டே இருப்பார்கள். அன்று 'பண்டாரநாயக்காக்கள்'; இன்று 'ராஜபக்‌ஷர்கள்'; நாளை இந்தப் பதவி வேறொருவருக்குப் போகலாம். ஆனால், பேரினவாத நோய் வாழ்ந்துகொண்டிருக்கும். அதுதான் இலங்கையின் சாபக்கேடு!




'Cycle to Work' முன்னெடுப்புக்கு

# செலான் வங்கி வலுவூட்டல்

பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப, தமது சேவைகளை வழங்குவதை உறுதி செய்யும் வகையில், செலான் வங்கி, நாட்டின் சைக்கிள் விநியோகத்தர்களுடன் கைகோர்த்து, செலான் கடனட்டைதாரர்களுக்கு சைக்கிள்களை கொள்வனவு செய்யும் போது இலகு தவணைமுறை மீளக் கொடுப்பனவுத் திட்டத்தை வழங்க முன்வந்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதாரச் சூழலில், சைக்கிள்களுக்கான கேள்வி பெருமளவில் அதிகரித்து வரும் நிலையில், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு இலங்கை முகங்கொடுத்துள்ளது. இந்தக் கேள்வி அதிகரிப்புடன், சைக்கிளின் விலைகளும் சந்தையில் பெருமளவு அதிகரித்துள்ளன. அதன் காரணமாக நுகர்வோருக்கு அத்தியாவசிய கொள்வனவுகளை மேற்கொள்வது பெரும் சவாலான விடயமாக அமைந்துள்ளது.

செலான் கடனட்டைதாரர்களுக்கு எந்தவொரு Tomahawk அல்லது *Velo By City stores* களுக்கு விஜயம் செய்து தமக்கு பிடித்த சைக்கிளை கொள்வனவு செய்ய முடியும். உதிரிப்பாகங்கள் மற்றும் சைக்கிள் சாதனங்களை ஒன்லைனில் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் அட்டைதாரர்களுக்கு இச்சலுகையை வழங்கும் வகையில் *e*-வணிக ஜாம்பவானாகத் திகழும் *Daraz* உடன் வங்கி கைகோர்த்துள்ளது. மின் சைக்கிள்களை நாடும் வாடிக்கையாளர்களுக்காக, செலான் வங்கி *Fono Technologies* உடன் கைகோர்த்துள்ளது.

இதில் எந்தவொரு விற்பனையாளர்களிடமிருந்தும் அட்டைதாரர்கள் கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது, 0% தவணைமுறை மீளச் செலுத்தல் வசதியை 12 மாத காலப்பகுதிக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தச் சலுகை தொடர்பில் செலான் வங்கியின் அட்டைகள் பிரிவின் தலைமை அதிகாரி ருச்சித் லியனகே கருத்துத் தெரிவிக்கையில், "இந்த நெருக்கடியான காலப்பகுதியில் எமது அட்டைதாரர்களுக்கு அவசியமான சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்கு மேலதிக நிதிச் சுமையை ஏற்படுத்தாது வசதி வாய்ப்பை வழங்குவது முக்கியமானது என செலான் வங்கியைச் சேர்ந்த நாம் கருதுகின்றோம். இலங்கை இந்த நெருக்கடியான காலப்பகுதிக்கு முகங்கொடுத்துள்ள சூழலில், பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில், சமூகத்தாருக்கு எம்மாலான பங்களிப்பை வழங்குகின்றோம்" என்றார்.

0% தவணை முறை மீளச் செலுத்தல் திட்டத்தினூடாக அட்டைதாரர்களுக்கு நிதி நிவாரணம் வழங்கப்படும். இந்த வசதியைப் பயன்படுத்தி மேலும் வாடிக்கையாளர்கள் சைக்கிள்களை கொள்வனவு செய்வார்கள் என செலான் வங்கி எதிர்பார்ப்பதுடன், ஆரோக்கியமான சமூகம் மற்றும் தூய்மையான சூழலை ஏற்படுத்துவதில் பங்களிப்பு வழங்கும். நீண்ட கால அடிப்படையில் முதலீடாக அமைந்திருப்பதுடன், அட்டைதாரர்களுக்கு அதிகரித்துச் செல்லும் எரிபொருள் செலவை கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் என்பதுடன், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும்.

4,000 நாள்களைத் தொட்டது

# நெஸ்லே லங்கா

நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் பாதுகாப்புடனான செயற்பாடுகள், 4,000 நாள்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளதுடன், நிறுவனம் தனது பணியாளர்கள் மற்றும் அவர்களின் பாதுகாப்பின் மீது கொண்டுள்ள வலுவான அர்ப்பணிப்பை இது மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

குருநாகலில் அமைந்துள்ள மற்றும் அதன் விநியோக நிர்வாக ஏற்பாட்டுக் கூட்டாளரான *EFL 3PL* உடன் இணைந்து செயற்படும் நெஸ்லே லங்கா விநியோக மையத்தின் ஊழியர்கள் 150 க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட ஓர் அணியாக உள்ளனர். மிகவும் நேசிக்கப்படும் நெஸ்லே தயாரிப்புகளை திறன்மிக்க வகையில் களஞ்சியப்படுத்தி, அவற்றின் போக்குவரத்தை உறுதிசெய்து, நாடளாவிய ரீதியில் உள்ள நுகர்வோருக்கு அவை கிடைக்கும் வகையில் இவ்வணி சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

இந்தக் குறிப்பிடத்தக்க சாதனை இலக்கினை நினைவுகூரும் நிகழ்வு 2022 ஒகஸ்ட் 30ஆம் திகதி நெஸ்லே லங்காவின் விநியோக மையத்தில் நடைபெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா, நெஸ்லே லங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்சென்யா, நெஸ்லே லங்காவின் வழங்கல் சங்கிலிக்கான துணைத் தலைமை அதிகாரியான பஞ்சாட்சரம் சத்தியேந்திரா, *EFL 3PL* பிரதம நிறைவேற்று அதிகாரி சம்மி அக்பர், நெஸ்லே லங்கா மற்றும் *EFL 3PL* அணிகள் ஒன்றிணைந்து இந்நிகழ்வில் கலந்து கொண்டன.

கடுமையான சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களை



கடைபிடித்தவாறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் உரையாற்றிய நெஸ்லே லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்சென்யா கருத்து வெளியிடுகையில், "எமது விநியோக மையத்தின் பாதுகாப்பான செயற்பாடுகள் 4,000 நாள்களை எட்டிய சாதனை இலக்கினைக் கொண்டாடுவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். எமது வணிகத்தின் இதயநாடியாக எமது பணியாளர்கள் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். எனவே, நெஸ்லே நிறுவனத்தில் பாதுகாப்பு என்பது எப்போதும் முன்னுரிமையாக உள்ளது. பணியிடத்தில் தமது சொந்த பாதுகாப்பை உறுதிசெய்து, எமது கடுமையான பாதுகாப்புத் தராதரங்களை நிலைநாட்டுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு பணியாளரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இன்று நாம் எதிர்கொள்ளும் பல நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில்

> **" எமது வணிகத்தின் இதயநாடியாக எமது பணியாளர்கள் இருப்பதாக நம்புகிறோம். எனவே, பணியிடத்தில் தமது சொந்த பாதுகாப்பை உறுதிசெய்து, கடுமையான பாதுகாப்புத் தராதரங்களை நிலைநாட்டுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு பணியாளரையும் பாராட்டுகிறேன்**

எமது வணிகச் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்காக விநியோக மைய அணியினர் ஆற்றி வருகின்ற சிறந்த பணிகளையும் இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்" என்று தெரிவித்தார்.

மிக உயர்ந்த பாதுகாப்பிற்கான தமது உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் வகையில், நெஸ்லே லங்கா மற்றும் *EFL 3PL* இன் சிரேஷ்ட நிர்வாகம், ஓர் உறுதிமொழியை எடுத்துக்கொண்டது. அதாவது பணியிடத்தில் ஒருவரின் சொந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை நினைவூட்டும் வகையில், அவர்கள் அங்கு கலந்துகொண்டிருந்தவர்கள் முன்னிலையில் இந்த உறுதிமொழியை முன்வைத்தனர். மேலும், ஊழியர்களின் பிள்ளைகள், பாதுகாப்பு தொடர்பில் தாம் கொண்டுள்ள விளக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் சித்திரப் போட்டி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. பொறுப்புணர்வுடனான நடத்தையை ஊக்குவிப்பதற்காகவும், பாதுகாப்புக் கலாசாரத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காகவும் உயர்ந்த பாதுகாப்புத் தரத்தை வெளிப்படுத்திய ஊழியர்களை அங்கீகரிப்பதற்காக விருது வழங்கும் வைபவமும் நடத்தப்பட்டது.


கட்காரி

# பாடசாலை கழிவறையை கையால் சுத்தம் செய்த எம்.பி

மத்திய பிரதேசத்தில் பெண்கள் படிக்கும் பாடசாலிக்குச் சென்ற பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க.) மக்களவை உறுப்பினர் ஜனார்தன் மிஸ்ரா தனது கையால் கழிவறையை சுத்தம் செய்தார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாக பரவியது.

அவரது சொந்த தொகுதியான ரேவாவுக்கு உள்பட்ட கட்காரி என்னுமிடத்தில் உள்ள பெண்கள் பள்ளிக்கு மரம் நடும் நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினராக ஜனார்தன் மிஸ்ரா செப்டெம்பர் 22ஆம் திகதி சென்றுள்ளார்.

அப்போது அந்தப் பள்ளியில் மாணவிகள் பயன்படுத்தும் கழிவறை அசுத்தமாக இருந்ததாகவும் இதைக் கண்ட மிஸ்ரா எந்தவித உபகரணத்தையும் பயன்படுத்தாமல் கையால்



கழிவறையை சுத்தம் செய்ததாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மிஸ்ரா கூறுகையில், "அனைவரும் சுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும். மகாத்மா காந்தி முதல் பிரதமர் மோடி வரையில் இதை வலியுறுத்தியுள்ளனர். சுத்தம் குறித்து மக்களை ஊக்கப்படுத்தவே நான் இவ்வாறு செய்தேன். இது பெரிய விஷயமே இல்லை" என்றார்.

இதற்கு முன்பும் ஜனார்தன மிஸ்ரா, கழிவறையை சுத்தம் செய்தும், குப்பை வண்டியை இயக்கியும் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை

# "நதிகளை அழித்தால் நாமும் அழிவோம்"

2015ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தை யாராலும் மறக்க முடியாது. இது போன்ற வெள்ளம் பெங்களூர் நகரை சமீபத்தில் புரட்டி எடுத்தது.

'சென்னையில் இயற்கை வடிகால்களை பராமரிக்கத் தவறியது, நீர் நிலைகள், நிதிகள் ஆக்கிரமிப்புகள்தான் வெள்ளத்துக்கு முக்கிய காரணம்' என்று சிஏஜி அளித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறிப்பாக, சென்னையில் உள்ள பெரிய நீர்நிலைகள் அனைத்தும் கட்டடங்களாக மாறியதும், நீர்நிலைகள் ஆக்கிரமிப்புதான் முக்கிய காரணம் என்று கூறப்பட்டது.

இப்படி நகரமயமாக்கல் என்ற பெயரில் பெருநகரங்களில் நதிகள் மற்றும் நீர்நிலைகள் அழிக்கப்பட்டு, வான் உயர கட்டடங்கள் எழுப்பட்டு வருகிறது. இதனால்தான் சிறிய மழைக்கு கூட இந்த இடங்கள் மீண்டும் குளங்களாக மாறி விடுகின்றன.

இவ்வாறு அழிக்கப்பட்டு வரும் நிதிகளை பாதுகாக்க சர்வதேச அளவில் ஒவ்வோர் ஆண்டும் உலக நதிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டு செப்டெம்பர் மாதம் நான்காவது ஞாயிற்றுக்கிழமை இந்த உலக நிதிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இவ்வாண்டு இந்தத் தினம் உலகம் முழுவதும் நேற்று (25) கொண்டாடப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள நீர்நிலைகள் மற்றும் நீர் வழித்தடங்கள் தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது.

மும்பை



# ஒன்றரை மணி நேரம் தவிர்க்கும் கிராமம்

மாலை நேரங்களில் அலைபேசி, தொலைக்காட்சி உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்களை தவிர்க்கும் முறையை மகாராஷ்டிராவிலுள்ள ஒரு கிராமமக்கள் கடைபிடித்து வருகின்றனர்.

மகாராஷ்டிரா மாநிலம் சாங்லி மாவட்டத்தில் அமைந்துள்ளது மோஹித்யாஞ்சே வத்காவோன் கிராமம். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் மாலை 7 மணி முதல் இரவு 8.30 மணி வரை இலத்திரனியல் சாதனங்களையும் அணைத்து வைத்துவிடுகின்றனர்.

இந்த ஒன்றரை மணி நேரத்தில் அவர்கள் புத்தகம் படிப்பது, பாடப்புத்தகங்களில் எழும் சந்தேகங்களை அடுத்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது, பெற்றோர் உறவினரிடம் தெரியாத விஷயங்களைக் கேட்டுப் பெறுவது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு 7 மணியானதும் கிராமத்தில் ஒரு சமிக்ஞை ஒலி எழுப்பப்படும். இந்தச் சத்தம் ஒலிக்கப்பட்டதும், கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் இலத்திரனியல் சாதனைகள் அனைத்தையும் அணைத்து விடுகின்றனர். இரவு 8.30 மணிக்கு மீண்டும் சமிக்ஞை ஒலி எழுப்பப்பட்டதும் சாதனங்களை செயல்படுத்துகின்றனர்.

10 புதுடெல்லி



காங்கிரஸ் தலைவர் தேர்தலில்

# போட்டியிடுவதை உறுதி செய்த சசி

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு படிவத்தை சசி தரூர் பெற்றதை அடுத்து, அவர் தேர்தலில் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது.

காங்கிரஸ் தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 17ஆம் திகதி நடைபெறும் என அக்கட்சி அறிவித்துள்ளது. தலைவர் பதவிக்கு போட்டியிட ராகுல் காந்தி மறுத்ததை அடுத்து, தான் போட்டியிடப் போவதாக மூத்த காங்கிரஸ் தலைவரும் ராஜஸ்தான் முதல்வருமான அஷோக் கெலாட் அறிவித்துள்ளார்.

வேட்புமனு என்றைக்கு தாக்கல் செய்யப்படும் என்பதை பிறகு அறிவிப்பதாகவும் அவர் கூறினார். மேலும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்தித்து தனது விருப்பத்தையும் அவர் தெரிவித்தார்.

இதேபோல், காங்கிரஸ்

> **" தலைவர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம். சோனியா காந்தியிடமோ, ராகுல் காந்தியிடமோ அனுமதி பெறத் தேவையில்லை**

தலைவர் பதவிக்குப் போட்டியிடுவது தொடர்பாக மற்றொரு மூத்த தலைவரான சசி தரூரும் சோனியா காந்தியை சந்தித்து தெரிவித்தார். மேலும், தேர்தலை நடத்தும் குழுவின் தலைவர் மதுசூதன் மிஸ்த்ரியைச் சந்தித்து, தேர்தல் விதிமுறைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனிடையே, தலைவர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்றும், இதற்கு சோனியா காந்தியிடமோ, ராகுல் காந்தியிடமோ அனுமதி பெறத் தேவையில்லை என்றும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

# கணவரின் சடலத்தை பாதுகாத்த மனைவி

க

உத்தரப் பிரதேச மாநிலம், கான்பூரை சேர்ந்தவர் விம்லேஷ் தீட்சத். வருமான வரித்துறை அலுவலகத்தில் பணியாற்றி வந்த இவர், உடல் நலக்குறைவால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 2021 ஏப்ரலில் இறந்தார். அவருடைய உடலை பெற்றுக் கொண்ட குடும்பத்தினர், அதை தகனம் செய்யவில்லை. விம்லேஷ் கோமாவில் இருப்பதாகவும், திரும்ப வருவார் என்றும் நம்பினர்.

> **" உடலை பெற்றுக் கொண்டவர்கள் அதை தகனம் செய்யவில்லை. கோமாவில் இருப்பதாகவும் திரும்ப வருவார் என்றும் நம்பினர்**

இறந்த கணவரின் சடலத்தின் மீது தினமும் கங்கை நீரை அவருடைய மனைவி தெளித்து வந்துள்ளார். அவருடைய குடும்பத்தினரும் அவ்வப்போது ஒக்சிஜன் சிலிண்டரை வாங்கி வந்து பொருத்தி உள்ளனர். விம்லேஷ் கோமாவில் இருப்பதாக அண்டை வீட்டினரையும் நம்ப வைத்துள்ளனர்.

இந்நிலையில், விம்லேஷின் ஓய்வூதிய கோப்புகள் அப்படியே இருந்ததால் அதிகாரிகள் சந்தேகம் அடைந்தனர். மருத்துவ அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கலெக்டர் உள்ளிட்டோர் விம்லேஷ் வீட்டிற்கு சென்று ஆய்வு செய்தனர்.

அங்கு அழுகிய நிலையில் இருந்த விம்லேஷ் சடலத்தை கண்டு அதிர்ந்தனர். பின்னர், விம்லேஷ் சடலத்தை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினர். இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. அவருடைய மனைவி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும் தெரியவந்துள்ளது.

# கண்ணீருடன் விடைபெற்றார் ரோஜர் பெடரர்

ராட் லேவர் கோப்பை டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் நடாலுடன் இணைந்து ஆடிய கடைசி ஆட்டத்துடன் ஜாம்பவான் ரோஜர் பெடரர் விடை பெற்றார்.

கடந்த 20 ஆண்டுகளாக டென்னிஸ் விளையாட்டின் பிக் த்ரீ என ரோஜர் பெடரர், ரபேல் நடால், ஜோகோவிச் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் மூவரும் இணைந்து 20 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டங்களை கைப்பற்றி உள்ளனர். சுவிட்சர்லாந்தின் பேஸல் நகரைச் சேர்ந்த பெடரர் மிகவும் நளினமான ஆட்டத்துக்கும், புல்தரை மைதானத்தின் புலி எனவும் அழைக்கப்படுபவர்.

20 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான பெடரர், மூட்டு காயம் காரணமாக கடந்த 2021 விம்பிள்டன் போட்டி காலிறுதிக்கு பின் ஆடவில்லை.

உடல்தகுதி சீரடையாத நிலையில் 41 வயதான பெடரர் கடந்த வாரம் டென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்தார்.

இந்நிலையில் லண்டனில் வெள்ளிக்கிழமை இரவு



நடைபெற்ற ராட்லேவர் கோப்பை போட்டி இரட்டையர் பிரிவில் ஐரோப்பிய அணியில் தனது நீண்டகால எதிராளி நடாலுடன் இணைந்து உலக அணியின் பிரான்ஸஸ் டியாஃபோ-ஜேக் சாக் ஆகியோருடன் மோதினார்.

இதில் முதல் போட்டியை 4-6 என இழந்த நிலையில், இரண்டாவது போட்டியில் போராடி 7-6 என நடால்-பெடரர் இணை கைப்பற்றியது. எனினும் மூன்றாவது போட்டி நீண்டு கொண்டே சென்ற நிலையில் 11-9 என டியாஃபோ-ஜேக் இணை வென்றது. தனது கடைசி ஆட்டத்தில் தோல்வி அடைந்த நிலையில், டென்னிஸ் அரங்கில் இருந்து பிரியா விடை பெற்றார் ஜாம்பவான். அப்போது அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது.

இதுதொடர்பாக பெடரர் கூறியதாவது: எப்படியும் முடிவுக்கு வர வேண்டும். மிகவும் சிறந்த நாளாக இது இருந்தது. எனக்கு வருத்தமாக இல்லை. எனது ஷூ லேஸ்களை மீண்டும் கட்ட முடிந்தது பெருமையாக இருந்தது. ரபேல் நடாலுடன் இணைந்து ஆடியது சிறப்பாக அமைந்தது. விடை பெறுவதால் எந்த அழுத்தமும் இல்லை: என்றார். அத்துடன், ஜாம்பவான்கள், வீரர்கள், நண்பர்களுக்கு நன்றியையும் தெரிவித்தார்.



### 2022 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண விளையாட்டு விழா

# மட்டு. மாவட்டம் சம்பியனாக தெரிவு

எப்.முபாரக்

47வது தேசிய விளையாட்டு விழாவுக்கு இணைவாக நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில், சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டம் இம்முறை வெற்றிவாகை சூடிக்கொண்டது.

கிழக்கு மாகாண விளையாட்டு விழா நிகழ்வுகள், கடந்த 22,23ஆம் திகதிகளில் கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றன.

ஆரம்பநாள் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கலந்து சிறப்பித்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200க்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர். இவ்விழாவில், கிழக்கு மாகாணத்தினுடைய பல சாதனைகள் புதுப்பிக்கப்பட்டன.

அதன்படி சிறந்த சுவட்டு நிகழ்ச்சிக்கான வீராங்கனையாக அம்பாறை மாவட்டத்தினுடைய இ. ஜே. பி. ஏ. என் எதிரிவீர தெரிவுசெய்யப்பட்டார்.

அத்துடன் சிறந்த சுவட்டு நிகழ்ச்சிக்கான வீரராக திருகோணமலை மாவட்டத்தினுடைய ஏ. என். எம். நாசீக் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த மைதான நிகழ்ச்சிக்கான வீராங்கனையாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வி. தனுஷ்காவும் சிறந்த மைதான நிகழ்ச்சிக்கான வீரராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ரதுஷனும் இதன்போது தெரிவு செய்யப்பட்டனர்.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவினுடைய மிகச் சிறந்த மெய்வல்லுநர் நிகழ்ச்சியின் வீரராக ஈட்டியெறிதல் போட்டியில் கலந்துகொண்ட ஆர்.ரதுஷான் வெற்றிவாகை சூடினார்.

பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2 ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இப்போட்டியின் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் பெற்றுக்கொண்டன.

அதேபோன்று, ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் இப்போட்டியின் சம்பியனாக திருகோணமலை மாவட்டமும் தட்டிச் சென்றன.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் 2ஆம் இடத்தை அம்பாறை மாவட்டமும் சம்பியனாக மட்டக்களப்பு மாவட்டமும் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிபெற்ற வீரவீராங்கனைகளுக்கு கேடயங்களையும் சான்றிதழ்களையும் கிழக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சினுடைய செயலாளர் எச். இ. எம். டபிள்யூ. ஜி திஸாநாயக்க சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விளையாட்டு விழாவின் ஆரம்பநாள் நிகழ்வுகளில் கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் துஷித பி வணிகசிங்க,திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என் ஜயவிக்ரம, கிழக்கு மாகாண அமைச்சினுடைய செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் என். எம். நௌபீஸின் அழைப்பின் பேரில் இவர்கள் கலந்து சிறப்பித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# 'மன்கட்' முறையில் ஆட்டமிழந்தார் டேவிஸ்

### அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் தீப்தி

ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இதில் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 1-2 என்ற கணக்கில் இந்திய அணி இழந்தது. அடுத்து இரண்டு அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்திய அணி ஏற்கெனவே கைப்பற்றி உள்ளது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி போட்டி லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் சனிக்கிழமை (24) நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து மகளிர் அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது. அதன்படி இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணி 45.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 169 ஓட்டங்களை எடுத்தது.

இந்திய அணி தரப்பில் தீப்தி ஷர்மா 68 ஓட்டங்களுடன் கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். இதையடுத்து 170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இங்கிலாந்து அணி 43.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது. இதன்மூலம் இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இந்திய மகளிர் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என கைப்பற்றியது.

இந்த போட்டியில் இங்கிலாந்து அணி 39 பந்துகளில் 17 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், கடைசி ஒரு விக்கெட்டை வைத்துக்கொண்டு கடுமையான சூழலில் விளையாடிக்கொண்டிருந்தது. இதனால் ஆட்டம் பரபரப்பாக சென்றது. அனால், இங்கிலாந்து அணிக்கு கடைசி விக்கெட் மறக்கமுடியாத ஒன்றாக அமைந்தது.

இதன்மூலம் இந்தியா கடைசி விக்கெட்டை வீழ்த்தி ஆட்டத்தில் வெற்றிபெற்றது. தீப்தி ஷர்மா அந்த கடைசி விக்கெட்டை மங்கட் முறையை பயன்படுத்தி ரன் அவுட் செய்தார்.

ஆட்டத்தின் 43ஆவது ஓவரின் 4 ஆவது பந்தை இந்திய வீராங்கனை தீப்தி ஷர்மா வீசிய போது அந்த பந்தை ப்ரேயா டேவிஸ் எதிர்கொண்டார். எதிர் முனையில் இங்கிலாந்து அணி வீராங்கனை சார்லீ டீன் நின்றார். ஆனால் தீப்தி ஷர்மா பந்துவீசுவதற்குள் கிரீஸை தாண்டி பல அடிகள் நகர்ந்து முன்னே சென்றுவிட்டார் சார்லீ டீன்.

இதை பயன்படுத்திக்கொண்ட தீப்தி, பந்தை வீசாமல் ஸ்டம்ப்பில் அடித்து சார்லீ டீன்-ஐ அவுட் செய்தார். இதனால் மைதானத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ரஷ்யா




# கச்சாவை நிறுத்துவோம்

### உலக நாடுகளை எச்சரிக்கும் ரஷ்யா

ஜி7 நாடுகள் நிர்ணயித்த விலை ஏற்றுக் கொள்ள கூடியதாக இல்லாவிட்டால், சர்வதேச சந்தைக்கான கச்சா எண்ணெய் விநியோகத்தை நிறுத்த போவதாக ரஷ்யா எச்சரித்துள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து கடுமையாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனையடுத்து உக்ரேன் மீதான போருக்கு ரஷ்யா செலவிடும் தொகையைக் கட்டுப்படுத்தவும், அதன் வருவாயைக் குறைக்கவும் ஜி7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் சமீபத்தில் கச்சா எண்ணெய் உச்சவரம்பு விலையை நிர்ணயித்து அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், ஜி7 நாடுகள் நிர்ணயித்த உச்சவரம்பு விலை ரஷ்யாவால் ஏற்று கொள்ள கூடியதாக இல்லாத பட்சத்தில், சர்வதேச சந்தைக்கான கச்சா எண்ணெய் விநியோகம் அடியோடு நிறுத்தப்படும் எனவும் அத்துடன் அமெரிக்காவின் உச்சவரம்பு விலைக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளுக்கான விநியோகமும் நிறுத்தப்படும் என ரஷ்யா அறிவித்துள்ளது.

சீனா



# இனி விண்வெளியை சுற்றிப் பார்க்கலாம்

சீனா தனியார் பயணிகளுக்கென தன் முதல் வணிக விண்வெளி பயணத்தினை ஆரம்பிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இது குறித்து 'லாங் மார்ச் 11 ரொக்கெட்' திட்டத்தின் பொது இயக்குநரும், அரசாங்க ஆதரவுடன்கூடிய வணிக விண்வெளி ஏவுகணை நிறுவனமான CAS ஸ்பேஸின் நிறுவனருமான யாங் யிகியாங்கை கருத்துத் தெரிவிக்கையில், "சீன விண்வெளி சுற்றுலாதுறை என்பது 2025ஆம் ஆண்டளவில் முழுமையாக வளர்ச்சியடையும். இப்பயணத்திற்காக ஒரு நபருக்கு 2-3 மில்லியன் யுவான் கட்டணமாக வசூலிக்கப்படலாம்" என்றார்.

மேலும் இன்று பூமியின் சுற்று வட்டப் பயணம் என்பது மிகவும் வளர்ச்சி அடைந்து வருவதுடன் பெரும்பாலான நடுத்தர மக்களுக்கு ஏற்றதாக இது மாறிவருவதாகவும், சீன விண்வெளி பயணத்தில் ஒரு நேரத்தில், 7 சுற்றுலாப்பயணிகள் வரை கடல் மட்டத்தில் இருந்து 100 கிலோ மீற்றர் உயரத்தை அடைந்து, பிறகு பூமிக்கு 10 நிமிடங்களில் திரும்பலாம் எனவும் தெரிவித்துள்ளார்.



ஈரான்

# ஹிஜாபிற்கு எதிரான போராட்டம்; 50 பேர் உயிரிழப்பு

ஈரானில் ஹிஜாபை எதிர்த்து போராடும் மக்கள் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 50 நபர்கள் பலியானதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண், பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

> **ஈரானில் ஹிஜாபை எதிர்த்து போராடும் மக்கள் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 50 நபர்கள் பலியாகினர். ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண், பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்**

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்காக பெண்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, பெண்கள் பலர் ஹிஜாபைக் கழற்றி எறிந்தும் அதனை தீயிட்டு எரித்தும், தலைமுடியை வெட்டியும் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டம் நடத்தும் பெண்கள் மீது காவல்துறையினரும் பாதுகாப்பு படையினரும் கடும் தாக்குதல் மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன்படி, தற்போது வரை போராட்டத்தில் ஈடுபட்ட 50 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அந்நாட்டின் மனித உரிமைகள் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

உக்ரேன்

# உக்ரேன் மக்களுக்கு ரஷ்ய குடியுரிமை

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 6 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருவதோடு உக்ரேனின் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றியுள்ளது.




இந்நிலையில் ரஷ்யப் படையினர் தாங்கள் ஆக்கிரமித்த பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு ரஷ்ய குடியுரிமைகளை வழங்கி அவர்களை ரஷ்யாவுடன் இணைக்க முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா

# தலைமுடிக்கு இதை பயன்படுத்த வேண்டாம்

அணு ஆயுத தாக்குதல் நடைபெறும் போது மக்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து அண்மையில் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.



அதில், 'ஓர் அணு ஆயுத குண்டு வெடித்தால், அதிலிருந்து கதிரியக்க தூசிகள் மேகங்களை போல காற்றில் பல தூரம் பரவுகின்றது. இந்த கதிரியக்க துகள்கள் உடலில் செல்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை கூட ஏற்படுத்தலாம். இந்தக் கதிர்வீச்சைத் தவிர்க்க மக்கள் செங்கல் அல்லது கொன்கிரீட் கட்டடத்திற்குள் தஞ்சமடைந்து கொள்ள வேண்டும். மேலும் மக்கள் தங்கள் கண்கள், மூக்கு மற்றும் வாயைத் தொடுவதைத் தவிர்ப்பதோடு, அத்தகைய சமயத்தில், மக்கள் உடனடியாகக் குளிக்க வேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 'கதிர்வீச்சு உடலை தாக்காமல் தடுக்க, உங்கள் தலைமுடியில் கண்டிஷனரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். கண்டிஷனர் உங்கள் தலைமுடிக்கும் கதிரியக்கப் பொருட்களுக்கும் இடையில் ஒரு பசை போல் செயற்படும். அப்போது கதிரியக்க தூசிகள் முடியில் ஒட்டிக்கொள்ளும். முடி இழைகள் நெகட்டிவ் சார்ஜ் செய்யப்பட்ட துகள்கள், அதேசமயம் கண்டிஷனர்கள் பாசிட்டிவ் சார்ஜ் கொண்ட துகள்கள். இவை இரண்டும் ஒன்றோடொன்று ஈர்க்கும். அவை கதிரியக்க தூசிக்கு பசையாக செயற்படுகின்றன.

உக்ரேன் போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்த தயங்கமாட்டோம் என்று ரஷ்யா மிரட்டியுள்ளதைத் தொடர்ந்து, அமெரிக்கா தங்கள் நாட்டு மக்களுக்கு இந்தப் பாதுகாப்பு அறிவுறுத்தலை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா

# அகதிகளுக்காகவே உருவாக்கப்பட்ட கடை



கொலம்பியாவில் உள்ள ஒரு நகரில் இயங்கி வரும் தையல் கடை, மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இக்கடையானது இலங்கை, வியட்நாம், சீனா, ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த அகதிகளால் இயங்கி வருகிறது.

ஈரானில் இருந்து கனடாவுக்கு அகதியாக வந்த ப்பரிட் ரொஹானி என்பவரால் இக் கடை ஆரம்பிக்கப்பட்டதாகவும் இக் கடையின் மூலம் பல்வேறு இன பின்னணி கொண்ட அகதிகளுக்காக தொழில் வாய்ப்பினை அவர் வழங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடையானது கனடா இராணுவம், பொலிஸார், தீயணைப்பு துறை எனப் பல்வேறு துறையில் பணிபுரிபவர்களுக்கும் சீருடை தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 26 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.